வேதாந்த டிண்டிமம்.

(வேதாந்தப் பேரிகை).

செய்யுளும் - உரையும்.

[illegible]

[illegible] சுவாமிகள்.

[illegible] பிரஸ்,

சென்னை

[illegible]

வியாஸ தாத்பர்ய நிர்ணயம்.

(இதுகாறும் தமிழில் வாராதது.)

ஸம்ஸ்க்ருதத்தில் அப்பய்ய தீக்ஷிதரென்னும் பெரிய வித்வானால் வசனமாக இயற்றப்பட்டுள்ளது. இதன் முதற் பரிச்சேதத்தில் சைவ வாதிகளையும் பக்ஷபாத மின்றி வாதப் பிரதிவாதி மத்தியஸ்த பூர்வகம் கண்டித்து வியாஸ பகவானது தாத்பர்யம் அத்வைதமே என ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டாம் பரிச்சேதத்தில் பிரஹ்மப் பிராப்தி அரூபத்தரூப ஸகுணப் பிரஹ்மத்தாலேயே ஆகும் என மற்றையோர்களைக் கண்டித்து நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இது ஸம்ஸ்க்ருத முணர்ந்தார்க்கன்றி மற்றையோருக்கும் பயன் படாமை கருதி, கோவிலூர் ஸ்ரீ ஸச்சிதானந்த ஸ்வாமிகளால் தமிழில் வசனமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

இது போன்ற சாஸ்திரம் இதுகாறும் தமிழில் இல்லையென்பதும் ஒருதலையே ஆதலின், வேதாந்திகளெல்லோரும் இதர மதங்களைக் கண்டித்தற்கு இப்புத்தகம் மறந்தும் கைவிடாது வைத்தற் குரியதாகும். இதனை வாசிப்போர்க்கு இதன் கெம்பீரத் தன்மை வெளிப்படும். விலை அணா எட்டு.

விஷ்ணு புராணம்	ரூ 2	8
அத்யாத்மராமாயணம்	2	8
குமாரதேவசாஸ்திரம்	0	10
பஞ்சதசப் பிரகரணம்-மூலம்	[illegible]	0
வள்ளுவர் சாஸ்திரம்	1	8
இருது வைத்தியம்	[illegible]	12
மதிநிருபணம்	1	12
[illegible]ஞானேற்பத்தி	2	0
சாவித்ரிப் பிரபந்தம்	3	10
கம்பராமாயணம் [illegible] 2 - வால்யம் படத்துடன்	6	0
வாக்யசுதையென்னும் திருக்குறுந்திருவிய விவேகம்-மூலமும்-உரையும்	0	2

மகாகணபதயே நமஃ.

வேதாந்த டிண்டிமம்.

VETANTA DINDIMAH

by SANKARACARYA

இது

கோவிலூர் மடாதிபதியாயெழுந்தருளியிருந்த

திருக்களாண்டவரென்னும்

ஸ்ரீமுஸ்ரீ

வீரசேகரஞானதேசிகரின்

பாதசேகரராய

ஸ்ரீசுப்பய்ய சுவாமிகளவர்களால்

ஸம்ஸ்கிருதத்தினின்றும்

தமிழில்

செய்யுளும் - உரையு மியற்றப்பட்டு,

மங்கலம் - ஷண்முக முதலியாரவர்களால்

சென்னை,

கோமளேசுவரன்பேட்டை,

சித்தாந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

[விலை அணா 4

சிவமயம்.

ஓம் மகா கணபதயே நம:

வேதாந்த டிண்டிமம்.

திங்களை யணிந்த சிவபிரான் குமரன் றேசிகத் திருவுரு வமதா, யங்கண்மா நிலத்தில் வீரமா தவனென் றவதரித் தின்பமே யடைவான், எங்களுக் கருள்செய் மறைமுடி முரசை யாவருமெளிதினி னுணர்வான், றங்கவன் பதத்தைச் சந்ததம் பணிந்தே தண்டமிழ்க் கவிதையாற் புகல்வேன்.

மங்கலம்.

எப்பர வேக தத்துவ மதனை யெழின்மறைமுடியின்டிண் டிமங்கள், ஒப்பறப் புகழ்ந்து துதிபுரிந் தேதனை யுபரடி யவர்தமக் கருளும், அப்பெரு மோளியாந் தக்ஷிணா மூர்த்தி யரும்பெயர்க் குரவனென் னேதிரிற், றிப்பிய மாக வெழுந்தருள் புரியத் தினந்தினம் பணிந்துவாழ்த் துவனே.

நூல்

1. இனிய போத்துருப் போக்கிய விலக்கண முடைத்தாய்த், தனிசெய்யான்மவ ஞன்மபார்த்தங்க ளிரண்டாம், ஊனமவ் வாத்துமாப் பிரமே யுடன்முத லலவா, மெனுமறைமுடி முறை டிண்டிம மினவயே.

(இதன் பொருள்.) போக்தாருத் தன்மை யிலக்கணம் வாய்ந்ததும், போக்கியத் தன்மை யிலக்கணம் வாய்ந்ததுமாய ஆன்மா அநான்மா வெனப் பெரிய இரண்டு பதார்த்தங்களுளவாம். அவற்றுள்:—ஆன்மாவென்பது பிரமமே யாம், ஆகாதிகளன்றென்க; எனவே ஆகாதிகள் அநான்மாக்களெனப்பெறும் என்னு மிவற்றையே வேதாந்தப் பேரியானது டிம் டிம் என அறைவதாமென்றுணர்க. 1

2. அவிரு மான்மனுங் கருண்முத்தி பந்தங் களளிக்கும், புவியின் ஞானவஞ் ஞானமென் பொருளிரண் டாகும், அவையுண் ஞானத்தி னன்முத்தி யல்லவா மபரா, லிவண்ம றைமுடி முரசறை டிண்டிம மிதையே.

(இ-ள்.) மோக்ஷத்தையும் பந்தத்தையுங் கொடுப்பனவாய ஞானம் அஞ்ஞானமென்னு மிரண்டு பொருள்களுள்ளன. அவ்விரண்டனுள், ஞானத்தால் முத்தியுண்டாம்; அஞ்ஞானத்தால் பந்தமுண்டாம் என்னு மிவற்றை வேதாந்த முரசு டிம் டிம் என்றறைகின்றதென்க. 2

3. இகழி லங்குவ் திலக்குவ மெனுமவடி வுடைத்தாம், புகழு ஞாதுரு ஞேயமென் பொளிரண் டோவாம், மகிழு ஞாதுரு ரூபமா

முதன் ஞேயம், முகிழ் மறைமுடி முரசறை டிண்டிம மிவையே

(இ - ள்.) விளக்குவது, விளங்குவது என்னும் இலக்கணம் வாய்ந்தனவாய ஞாதுரு ஞேய மென்னும் இரண்டு பொருள்கள் உள. அவற்றுள், ஞாதுரு பிரஹ்மமாம்; ஞேயம் உலகமாம் என்பனவே வேதமுடி முரசறையும் டிண்டிமமென் றுணர்க. 3

4. பிரிய வப்பிரி யங்களைப் பிறங்கவே பய க்கும், அரிய வின்பமுந் துன்பமு மாம்பொரு ளிர ண்டுண், டுரிய வின்பமெய்ப் பிரமமா முலகு துன் பமதாங், தெரிம றைமுடி முரசறை டிண்டிம மிவையே

(இ - ள்.) பிரியாப்பிரியங்களைச் செய்யும் இன்பம், துன்பம் என்னும் பொருள்க ளிரண் டுளவாம். அவற்றுள், இன்பம் பிரஹ்மமாம்; துன்பம் உலகமாம் என்னு மிவையே செய்யா மொழிமுடி முரசறை டிண்டிம மென்க. 4

5. சர்வ சம்மத மாகிய சமட்டியே வியட டி, யுருவ மாகிய பதப்பொரு ளாவிரண் டோர் மி, னருவ வீச்சுரன் சமட்டியா மாருயிர் வியட்டி, திரும றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) யாவருக்குஞ் சம்மதமாகிய சமஷ்டி, வியஷ்டி என்னும் இரண்டு பொருள்கள்

உள்ளன. அவற்றுள், சமஷ்டி ஈசுவரராம்; வியஷ்டி ஜீவனும் என்னுமிவையே மாமறை முடிமுரசு கோஷிக்கும் டிண்டிமமாம். 5

6. வத்து கத்துரு வடிவதந் திரங்களாய் வயங்குஞ், சுத்த ஞானகன் மங்களென் சொற் பொருளிரண்டாஞ், சுத்த ஞானத்தான் முத்தி யாந் தொழில்களா லன்றும், முத்தி யோதந்த முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) வத்து தந்திரமாய ஞானமும், கர்த்துரு தந்திரமாய கன்மமும் எனப்பதார்த் தங்கள் இரண்டாவாம். அவற்றுள், ஞானத் தான் முத்தியுண்டாம், கருமத்தாலின்றாம்; (நிஷ்காமியமாய்க் கருமமியற்றின் சித்தசுத்தி வாயிலாய் நன்மை பெறலாமென வுணர்க). என்னுமிவை மாமறைமுரசு கோஷிக்கும் டிண் டிமமாம். 6

7. வினவத் தக்கது தகாதது வென்சுகந் துயரை, யனிச முய்ப்பன வாகிய பொருளிரண் டவற்றுள், வினவுத் தக்கது பிரமமாம் வேறல வலவாம், எனமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) சுக துக்கங்களைக் கொடுப்பன வாய கேட்கத்தக்கது கேட்கத்தகாதது என் னும் இரண்டு பொருள்களுண்டு. அவற்றுள்,

கேட்கத்தக்கது பிரஹ்மமேயாம், அயலல்லவே யல்லவாம் என்னுமிவை வேதாந்தப் பேரியில் முழங்கும் டிண்டிமமா மென்ப. 7

8. அறலி னோப்பினை யுறலினாப் பளிப்பன வாய,நிறை கருதுறங் கருதுற கெடும்பொரு ளிர ண்டா, முறைக ருதுறல் பிரமமே யொழிந்தன் வலவாம். இறைம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) விசாரத்தினைக் கொடுப்பதும், கொடாததுமாய, சிந்திக்கத்தக்கது தகாதது என்னும் இரண்டு பொருள்களுண்டு. அவற் றுள், சிந்திக்கத்தக்கது பரப்பிரஹ்மமேயாம் மற்றதன்றாம் என்பவே வேதாந்தப் பேரிகோ ஷிக்கும் டிண்டிமமாமென் றுணர்க. 8

9. மதிச மாதியை மற்றதை மருவுற வழங் கு, மதிதியேயமு மத்தியே யமுமேன விரண்டா, மதிதி யானிக்கத் தக்கது பிரமமே மற்றன், றித ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) மதியானது சமாதியையும் அசமாதியையும் அடையுமாறு செய்யும் தியானிக் கத்தக்கதும் தகாததுமாய இரண்டு பொருளுண்டு. அவற்றுள், தியானிக்கத்தக்கது பிரஹ்மமேயாம், மற்றதலவே யன்றாம். இவையே

டாமறை முடிமுரசு அறையும் டிண்டிமமா மென்க. 9

10. யோகி யாயினும் போகியே யாயினு முயர்தி, யாகி யாயினு மிராகியே யாயினும் வீட் டைச், சோக மாமுணர் வுறினுறுந் தொலையை ஐய மிலையாம், ஏக மாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) யோகியா யிருப்பினும், போகி யாயிருப்பினும், தியாகியா யிருப்பினும், இரா கியாயிருப்பினும், சோகம் பாவனையாற் பிர ஹ்மஞானத்தை யடைந்தால் முத்தி சித்திக் கும்; ஐயமின்றும் என்னுமிவை மறைமுடி வாய முரசு முழக்கும் டிண்டிமமாமென் றுணர்க. 10

11. பிரம ஞானம தின்றியே பெரியுவீ டது தான், வருண வாசிர மங்களாம் வளர்வளங் களி னாற், கரும மோபோ சனைகளாற் கதிவுறின் முடி யா, தினைம றைமுடி முரசறை டிண்டிம மிவை யே.

(இ-ள்.) பிரஹ்மஞானமின்றி, வருணா சிரம சங்கேதங்களாலும் கர்மோபாசனை முத லியவற்றாலும் மோக்ஷமுண்டாக மாட்டாது என்பவே வேதாந்த முரசு முழக்கும் டிண்டி மமாம். 11

12. துவைத சத்திய மாகியே தோடர் சவைப் போலி, முதல வற்றினுற் குறையுறு மும்மையா முலகை, நோதுமல் செய்துக நுத லிய பிரமமே யுணர்க,விதம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) *அசத்தியமாய சருவ சம்சார மும் இரச ஆபாசாதியாற் றாஷிதமாம் (சார மற்றதென்பதாம்); ஆகையால் அவற்றை உபே க்ஷை செய்குக; பிரஹ்ம மொன்றையே தனது வடிவமா யுணர்க என்னுமிவையே மறைமுடி முரசறையும் டிண்டிமமாம்.* 12

13. பயன றுந்தொழில் பயனற மொழி களைப் பகர்தல், பயனில் வாதங்கள் பயனறு மெண்ணங்கள் பாறி, பயனு றுமொரு பிரமமே பற்றிநின் றுணர்மின்,இதைமறைமுடிமுரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) *பிரயோசனமற்ற தொழில்களைச் செய்வதையும், பிரயோசனமற்ற மொழிகளைப் பேசுவதையும், பிரயோசனஞ் சிறிதுமில்லாத வாதங்கள் செய்வதையும், பிரயோசன மனுவு மில்லாத எண்ணங்களைக் கோடிகோடியா யெ ண்ணுவதையும் முற்றிலும்விட்டொழித்தளப் போதம் அனர்த்த நிவிருத்தி ஆனந்தப் பிரா ப்தி வடிவமாய பிரயோசன சொரூபப் பிரஹ்ம*

மொன்றையே உங்கள் ஆன்ம சொரூபமாய்ச் சாக்ஷாத் கரிக்கச்சதா நிட்டைசாதிமின். என்னுமிவையே வேதாந்தப் பேரியானது கம்பீரமாய் முழக்கும் டிண்டிமமாமெனவுணர்ந்து கொள்க. 13

14. சிவவடிவமாய்ச் சீவனு நிலையுறச் சிவமும், நவவுயிர்வடிவாகியே நிலையுற நலமா, யவமறப்பெறன் முத்தியா மானந்தமாது,மிவண் மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்) ஜீவனது இலக்ஷிய சொரூபமானது சிவனது இலக்ஷிய சொரூபமாய்த் திரிபெறுமாறும், சிவனது இலக்ஷிய சொரூபமானது ஜீவனது இலக்ஷிய சொரூபமாய்த் திரிபெறுமாறும் சந்ததம் காணல்வேண்டும் (திரித்தியாசித்தல் வேண்டுமென்பதாம்). இதனாற் றற்பதத்தே நிகழும் பரோக்ஷத்தன்மையும், துவம்பதத்தே நிகழும் பரிச்சின்னத்தன்மையும் நீங்கும் வாயிலாய்ப் பேரானந்தப்பெறும் வீடடையலாமென்னு மிவையே மறைமுடி முரசறை டிண்டிம மென்ப. 14

15. சிவவடிவாய்ச் சீவனை யுணருக சிவத்தை, நவவுயிர்வடிவாயுற நன்னுக நவின்ற, அவையிரண்டை யயிக்கியம் முத்தியேயாது. மிவண்மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

பிறர்பொருட் டியற்றுவது தவிலொழித்துச் செய்யும் நாடக சமானமாகு மாதலினாலும் மற்றும் பிறவற்றானுமென்க என்னுமிவற் றையே இதத்தை யுபதேசிக்கும் வேதாந்த முரசு டிம்டிம் எனக் கோஷிக்கும். 68

69. காமி யத்தோடே நிஷித்தமா தியகன் மங் களினுற், சேம முத்தியின் வாதனை சேனித் தலோ விலையாம், தேம லர்ச்சிவன் றிருவரு ளத னினு னதுவாம், ஏம நன்மறை முரசறை டிண் டிம மிவையே.

(இ-ள்.) காமிய, நிஷித்த, பிராயச்சித் தாதி கருமங்களாற் கேவலம் கர்த்தவ்ய போக் தவ்யாதி புத்தியும் தேகாபிமானமும் இடப் பட்டுப் பத்தமேற்படுமேயன்றிச் சுத்தவாதனை யாலெய்து முத்தியுண்டாக மாட்டாதாம். வாசனை நிறைந்த மலர்களாலருச்சித்தேத்தும் சிவபெருமானுடைய திருவருளால் அம்முத்தி யானது பிரஹ்மான்மஞான வாயிலாச் சுலப மாய்க் கிடைக்கும் என்னுமிவற்றையே மகா மாட்சிமை தங்கிச் சர்வப் பிரமாணங்கட்கும் பிரமாண பூதமாய் இலங்கும் வேதாந்த பேரி யானது டிம்டிம் என முழக்கா நிற்கும். 69

70 அறிவு குவினை யழிதரா விடினும் பிறவி,வேதித்து போய்விடே [illegible] ஞேவியன் பய

னைச், செறித குமரி பவர்க்கரி வருவல சேய்ம்
மை, இறைமை மறைமுடி முரசறை டிண்டிம
மிவையே.

(இ - ள்.) அறிவுருவினை மனுஷ ஜன்ம மெடுத்தும் அறியானிடின் அவன் பிறவி பய னற்றதாம்; எடுத்த வாணாபோபொழியும். அல்லகூடாமை சர்வபதார்த்தங்களையும் சத்த மறிந்துகொண் டிருக்கு மறிவினை யறியாத தாச்சரியமேயாகும். என்னை? இவ்வுலகத்தே பருத்தேதன் இளைத்தேதன் முதலாக அறிவேன் அறியேன் எனுகக் கண்டுகொண் டிருக்கும் காணே னென்கின்றமையின். சர்வ வஸ்துக்க ளின் உண்மை யின்மைகளை யறிந்துகொண்டிரு க்கு மறிவே எனதுருவமெனத் திடதரமா யுணர்க; அவ்வாறுணர்ப்பட்டாற் பட்ட நிவாநு பவச் செல்வமுண்டாய்விடின் சர்வதுயர்களுந் தீர்ந்து என்றும் பேரானந்தப் பெருங்கடலிற் குளித்துலவலாம். ஆனாலத்தகைய அறிவை யறிந்து சுகிக்க அவ்வறிவு யாண்டையதோ வென மயங்கற்க; மற்றோ, அறியவேண்டுமென விழைந்து தேடுபவர்க்கு அவர் உருவமாயே யிருத்தலின் மிகு சேய்மைக்கலவாய் அத்தி யந்தம் அண்மையதேயாமென்றறிந்துகொள்க என்று மிவற்றையே நம்மனோர்க் கறிவுறுத் தருள்வான் நங்குருவேந் தந்தையாகிய பரமே

சுவரனால் அநாயாசமாயியற்றிய வேதசிகரமாகிய பேரியானது டிம்டிம் என முழக்கா நிற்கு மென்ப. 70

71. திகழ் தசமன்றன் றடையறு முணர் வதிற் றியக்கம், இகழ் பரிசிர மமதிலை யெங் ஙனே யங்ஙன், மகிழுந் தற்பிர மான்மவிஞ் ஞானத்தின் மருவும், இக மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) தன்னை நவமனென நினைந்து தசமனைத் தேடிய புமான் ஆப்தன் வாக்கியத்தால் நானே தசமன் என வுணர யாதொரு மயக்கமும் காயவாங்மன பரிசிரமும் இன்றாம். அவ்வாறே தன்னைத் தேகாதியென நினைந்திருந்தவன் ஆசிரியரது மகாவாக்கிய வுபதேசத்தால் தன்னையறியும் பிரஹ்மாத்மைக்கிய ஞானத்தே யாதொரு மயக்கமும் பரிசிரமுமின்றாம்; அன்றியும் மிகுந்த மகிழ்வும் உற்சாகமுமே யுண்டாய் விலைமதித்திரமே யாகும். ஆயின் மிகவும் பிரயாசமுளதெனக் கதைமுதலிய வற்றை கீர்த்தித்தல் மனிதவாதனையுள்ளவனைக் குறித்தே யன்றிப் பிறவல்ல. சுமைசுமத்தல் துன்பமேயன்றிச் சுமையெறிதல் துன்பமன்றன்றே. என்னுமிவற்றையே இகலோகத்தும் பரலோகத்தும் சுகத்தையே பயக்கும் சுருதி சிகாமுரசானது டிம்டிம் என முழக்கும். 71

72. அழியு பாதிக ளாற்றுறு மாசனைத் தினி லும், ஒழிநோ துமலுற் றரும்போகு ளுற்வது போன்றே,கழிதி ருசிய நினைவுறக்கருதுக பிரமம், எழின்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) குற்றமிலாத பொருளை யுல கத்தின்றாதலின், பொருள்களிடத்தே யுற்ற தொடக்கனை யுபேக்ஷித்து, உலகர் பொருள் களைக் கவர்வதேபோலத் துபரைத் தினர்க்கரும் திருசிய விஸ்மரணத்தைச் செய்து சந்ததம் தற்பிரமானந்த வடிவத்தையே சிந்தை செய் திடல் வேண்டும். குற்றத்தோடு கூடியிருக்கின் றனவே பொருள்களென வுலகர் உபேக்ஷியாத தேபோலத் திருசியத்தோடு கலந்து நிற்கின்ற தேதற்சொரூபமென அதிகாரி யின்வாங்கலாகா தென்பதாம் என்னுமிவற்றையே சம்த்ரார்த்தங் களால் இனிமையும்அமிருதத்தன்மையும் வாய் த்து எழில்பெற்றுள்ள வேதாந்தமாகிய பேரியா னது டிம்டிம் என முழக்குமென்ப. 72

73. இன்ப மற்பம்வல் லிடர்மிகும் விட யமே வுவரா, மன்பி னார்க்கு மெய் யனந்தமா மரியவா நந்தந், தனைப் ரம்பிர மத்தனிற் றனித் துறை பவர்க்கே,என்ப ரன்மறை முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) விடயத் தன்புற்று அதைமேவ நினைபவர்க்கு இன்பமே அற்பமாய்; துன்பமே,

அளவிறந்ததாம்; விடம் விரவிய மதுவுக்கு நிகராம் விடயங்களாதலின். "இன்பமனுவரா மிடாதற்கோ ராமலையா"மெனவும், "வலையிடு கண்ணியிற் பருந்தின்வாயரவு மண்டுகங்கொள சிறுபறவை நுகர்தறவை யாறுமே" யெனவும், "வான்மீ திறந்தவரை யுச்சினிப்பூமேவ னிடை கொளின்ப"மெனவும் சண்டேய்த்துணர்தற்பால தாம். தனது வடிவமாகிய பிரஹ்மத்தின் கண்ணே அகண்டப் பிரஹ்மாகார விருத்தி யோடு கூடி நிலைபெற்று விளங்குபவர்க்கு உண் மையாய அழிவற்ற வரிய வானந்தமென்றுங் கிட்டும் என்னுமிவற்றையே எனது வடிவமாக விளங்கும் பரமேசுவர னியம்பி யருளிய மாம றைச்சிர முரசு டிம்டிம் எனக் கோஷிக்கும். 73

74. மனு முயிரினைக் கொல்லொரு வயிற் றுதித் தவராற், றனந் தனதாராற் றனயராற் றுரவா கரத்தாற், றினந் துயருற றிடந்திடந் திவலையின் பிலையா, லேனு மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) ஜீவ காதகராய சகோதரரா னும், தலைத்தாரும், தனந்தருபவரானும், மைந் தரானும், பண்ணியரானும், இல்லத்தானும், நாடோறும் நிடமாகத துன்புண்டாமே யல் லால் ஒருதிவலையின் பேனும் உண்டாகாதாம் என்னுமிவற்றையே மறைமுடி முரசு டிம்டிம் என முழக்கும். 74

75. துயிலெழுந்தபின் றுயிலுறும் வரையொரு சிவத்தை,மயலற மிக மலர்தர மனனமே புரிக, புயனிறங்கு மரர்க்கதி செய்மையிற் பொருத்தா, னிபன்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே

(இ ள்.) *உறங்கி யெழுந்த பின்னர் உறக்கம் வரும்வரையினும் ஒப்பற்ற ஆனந்த வடிவ சிவத்தையே மயக்கமின்றி அஃதாவது ஐயந்திரிபின்றி அதி திடமாக மனத்தே தியானஞ்செய்க; ஏனெனின், மேகம்போலும் கார் நிறமுடையகாலன் மனுடர்க்கு அதிதூரத் திருக்கவில்லை யாதலின்; மற்றோ அதிசமீபத்தே யிருக்கின்றா னெனவுணர்தல் கடன் என்னு மிவற்றையே அநேகவிதமாய் விரித்ததிகாரிகட்குபதேசிக்கும் வேதாந்த பேரியானது டிம்டிம மென முழக்கும்.* 75

76. பெருகு மைந்தெனுங் கோசங்கட மக்குமே பெரிய, அருமை யாயுண ரார்த்தழி வுஞ்செய் மாயை, கரிய தற்கெனல் பிரமவிஞ் ஞானமாங் கதிர்சே, ரீரும றைமுடி முரசறை டிண்டிம மிவையே

(இ ள்.) *அன்னமயாதி ஐங்கோசங்கட்கும் அநர்த்தத்தையும் அழிவையும் செய்ய மாயை உரியையாம்; அதன் சான்றேனென்*

றிருக்கல் பிரஹ்மஞானமாம் என்றுமிவற் றையே பிரமாணத்தன்மையோடுங் கூடியொலி ராநின்ற வேதாந்த பேரியானது டிம்டிம் என முழக்குமென்ப. 76

77. நவவு ணர்வுளற் கருந்தச மத்துவ ஞான, முவமை யின்றிய வின்பினை யுதிக்குமா செயல்போ, லவழு மமுயி ரான்மனை யடைவுற லாது, மிவண்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) ஒன்பது பெயர்தா னிருக்கின் றார்கள் என்றும் ஞானவானுக்குப் பதின்மனே யாமென்றும் இன்மைஞானம் உண்டாகவே அது ஒப்பில்லாத பேரானந்தத்தை யுண்டாக்கு வதேபோலத் தேகாதிகளை யான்மாவென வுணர்ந்து துன்புறு முயிர் அறிவுருவத்தை யான்மாவென வுணரின் அவ்வுணர்வானது அழியாப் பேரின்பத்தை யடைவிக்கும் என்று மிவற் றையே இவ்வுலகத்திற்குத் திலகபூதமாய் விளங்கும் மாமறை யிருகிய முரசானது டிம்டிம் என முழக்கும். 77

78. இலகு மோன்பதின் பரமெனப் பிரத் தியக் கியங்கும், நலந வயா நன்குணர் ஞானியா மவற்கு, உலவு மந்தமெய் யுணர்விறற் றரியவீ டேண்டா மிலம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) தூல சூக்ஷும காரண தேகத்திரயம், ஜாக்கிர சொப்பன சுழுத்தியவஸ்தாத்திரயம், விசுவ தைஜசப் பிராஞ்ஞ அபிமானத்திரயம் என்னும் ஒன்பதினும் வேறெனப் பிரத்தியக் ரூபமாகிய ஆன்மா விலங்கும்; அவ்வாறே ஒன்பதினும் பரனென ஐயத்திரிபறச் சாக்ஷியைச் சாக்ஷாத்கரிக்க பிரஜ்ஞபவித்திற் குண்டாகிய அம்மெய்ஞ்ஞானத்தால் துரியம் (நான்காவது) எனவிளங்கும் மோக்ஷமானது கிடைக்கும் என்னு மிவற்றையே சர்வாக்கங்கட்கும் சிருகம் போற் குலவும் நிகமாந்த முரசம் டிம்டிம் என முழக்குமென ஆன்றோ ருரைப்பர். 78

79. நவமுணர்த்தரப் படுதலி ஞானமுமா
பாசம், நவவு பாதிக டொன்மையும் நவவடி வமதா,
யுவமை னவுணர்ந் தவசிட்டந் தன்னிலே மவு
னம், இவர்ம றைமுடி முரசறை டிண்டிம
மிவையே.

(இ - ள்.) ஒன்பது உபாதிகளும் திருசியங்களாய் விடப்படுதலின் போலிகளாம்; அவ்வகையாய ஒன்பதையும் அவற்றின் வடிவோடு மித்தையென வுணர்ந் தொழித்து எஞ்சிய வுணர்வின்கண்ணே இடையறாது நிதிபெற் றிலங்கலே மகாமௌனமாம். என்னு மிவற்றையே மேன்மையாகிய சுருதி சிகர முரசம் டிம்டிம் எனக் கோஷிக்கும். 79

(இ - ள்.) முன்னிகழ்த்திய நிட்டையாம் நிதித்தியாசனத்தை இடைவிடாது கைக்கொண்டொழுகி முடிவில் ஜீவனைச் சிவவடிவமா யுணர்தல் வேண்டும். அங்ஙனமே பிரமமாகிய சிவத்தை ஜீவவடிவமா யுணர்தல் வேண்டும். இவ்விரண்டின் ஐக்கிய ஞானத்தையே முத்தியென்னப்படும். எவ்வித முயல்வாலேனும் இதனையே சரீரமெடுத்த ஒவ்வொருவரும் அடைதல் வேண்டும் என்னு மிவையே நிகமாந்தமாகிய முரசு முழக்கும் டிண்டிமமாம். 15

16. சருவ நல்வடி வாற்பரம் பிரமமே சத
தம், சிரவ ணம்புரி பவனுடை யுருவமாய்த்
திகழும். ஒருவ கைத்துய ருண்மையை யுணர்
வதி லிலையா,லிரும றைமுடி முரசறை டிண்டிம
மிவையே.

(இ - ள்.) எவ்வாற்றானுமாய்ந்து நோக்கினும் சச்சிதானந்த நித்திய பூரணப் பரப்பிரமமே யாதொரு தடையுமின்றி எந்த ஞான்றும் உபநிடத அர்த்தங்களைச் சிரவணம் செய்யும் அதிகாரியின் சொரூபமாம். உண்மையாயும் அண்மையாயு மிராநின்ற தன்னுடைய வடிவத்தை யுணர்வதின்கண் யாதொரு ஆயாசமும் இன்றாமென்று வேதாந்த முரசு டிம் டிம் என்று கோஷிக்குமென்க. 16

17. இகப ரங்களிற் புரிதரு மிருவினை யே வையும், மிகுது யர்தரு மெனவிடுத் தொருதுயர் மிலையாச், சுகசி வமொரு பொருளையே துணிந்து சேர்ந் துணர்க, திகழ்ம றைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்.) இகலோகத்திற் சுகமாயிருக்க வேண்டிச் செய்யா நின்ற உழவு, தொழுவு, வரைவு, வாணிபம், சிற்பம், வித்தை என்பன வும், பரலோகத்திற் சுகமாயிருக்க வேண்டிச் செய்யா நின்ற யாக, தான, தப, ஓமம் என்பன வும், மிகுந்த துயரைத் தருமெனப் பன்முறை ஆராய்ந்து வாசனையற விடுத்துத் தாபத்திரயங் களுமற்ற சற்சிற் சுகவடிவ பரசிவத்தையே தைரியத்தோடும் சற்சங்கவாயிலா யறிந்து உய்க என்பவே மறைமுடி முரசு கோஷிக்கும் டிண்டிம கோஷங்க ளென்ப. 17

18. நுண்மை திண்மைய வாகிய தசை களி னுவவும், வண்மை யத்வைத த்வைத வா தங்களோ ரிரண்டாம், அண்மை யத்வைத வாதத்தான் மோக்ஷமே யாகும்,எண்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) தூல திருஷ்டியை யடைந் திருந்த காலத்தும், சூக்ஷ்ம திருஷ்டியை யடைந்திருக்குங் காலத்தும் சேர்ந்திருப்பன

வாய சர்வப் பிரமாண பூஷித அத்வைத வாதம் எனவும் அதன் சாதனமாய துவைதவாத மெனவும் வாதங்க ளிரண்டுள. அவற்றுள், தன்னுண்மைவடிவத்தை உரையா நின்ற அத்வைத வாதத்தான் மோக்ஷ மடைவுண்டாம்; மற்றதோ, மனத்தூய்மையையும் மன வொருமையையும் தரும் வாயிலாய் அதன் சாதனமாமென்ப. (ஸ்தூல திருஷ்டியால் பிரபஞ்சம் தனக் கன்னியமாய்த் தோற்ற நிற்கும். சூக்ஷ்ம திருஷ்டியாலோ யாவும் தன் மயமாய்த் தோற்றும்; ஆதலின் எவ்வாற்றானும் முயன்று சூக்ஷ்ம திருஷ்டியையே அதிகாரிகள் அவசியம் சம்பாதித்தல் வேண்டும் என்பது கருத்தாம்) என்று மிவற்றையே நிகமாந்த முரச சப்தம் டிம் டிம் எனக் கோஷிக்கும் என்க. 18

19. வினைபுரிபவர் திரும்புவர் விதிவழி
செயுபர, சனைபுரிபவர் திரும்புவர் சற்சுக வொளி
யாங், தனையறிபவர் திரும்பிலர் திரும்பிலர் சா
தம், என்மறை முடி முரசறை டிண்டிம மிவை
யே.

(இ - ள்.) யாக தான தபாதிகளைச் சகாமியமாய்ச் செய்யும் புருஷர் மேலுலகத்தை யடைந்து அமுதாதி போகங்களைச் சிறிது காலம் புசித்து மீளவும் பூவுலகின் கண்ணே

கருமானு சாரமாய்ப் பிறவிபெறுவிப்பான் திரும்புவர். விராட் முதலிய வற்றின் உபாசனைகளை வேதத்தில் விதித்தபடி சகாமியமாய்ச் செய்யும் அதிகாரிகள் மேனிலும் மேலாய வுலகத்தை யடைந்து விரும்பிய போகங்களை நெடுங்காலம் புசித்துத் திரும்புவர். அவரும் பூவுலகின்கண்ணே பிறவி பெறுவதில் பாதோரைப் பாடுகின்றும். சச்சிதானந்த நித்திய பூரண பர சிவமாகிய தேகக் குகையினுறையும் தமது வடிவத்தை அசம்பாவனை விபரீதபாவனைகளற உணர்பவர் யாண்டும் செல்லாமையின் (வாசனையறலால் அவரது பிராணன் வெளிக்கிளம்பாமல் உலையிரும் புண்ட நீர் போல் உடலுக்குள் வளைபட்ட சேதனத்தின் கண்ணே லயமாதலின்) அவர் திரும்புவதின்றாம் என்று இம்முறை உணர்கவென்று மிவையே வேதாந்த முரசு கோஷிக்கும் டிண்டிமம் என்னும் கோஷங்களாமென் றுணர்க. 19

20. கரும முற்பயன் போய்பதாய்க் க்ஷணை ஞதுவாம், அருமை ஞானத்தின் பயனப ரோக்கமெய் யாதும், உரிமை யாதலி னுணர்வையே பயிலுக வுயர்ந்தோர், இரும றைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்.) கரும உபாசனைகளின் பயனை போகமுமாம், அழிவை யுடையதாம், மீண்

டும் பிறப்பிற்கேதுவாம். அருமையான தன் வடிவ சிவஞானத்தின் பயனோ அபரோக்ஷமாம்(கைகண்ட பலமாம்). அஃதாவது சுவாநுபூதியிற் றெரியத் தக்கதாம்; என்றும் அழியாததாம்; அடைந்த அனர்த்த நிவிருத்திரூப ஆநந்தவடிவம் என்று மழியாமையின். ஆதலின், சாதன சதுட்டய சம்பன்னர் மெய்ஞ்ஞானத்திற் குரிய சிரவண மனன நிதித்தியாசனங்களையே முயன்று பயிலுக என்பதே வேதாந்த முரசு டிம் டிம் என்றறையுங் கோஷங்களாம். 20

21. அறிஞ ரிச்சிர மம்பய னற்றதே யாகுங்,
கறைக ருமியிச் சிரமமும் பயன்றனைக் கருவா,
அறிவ றிதரு மெய்புணர் வில்லரோ யாயின்,
இறைம றைமுடி முரசறை டிண்டிம மிதுவே.

(இ - ள்.) அகண்ட சச்சிதாநந்த அமலப் பிரஹ்மைக்கியத்தை யுணர்ந்திலராயின் எத்தகைய விவேகிகளேனு மெடுத்துக்கொள்ளுங் கற்றல் கேட்டல் முதலியவற்றின் எத்துணைச் சிரமமும் எள்ளளவு பயனையும் பயவாதாம். கருமிகளா லாற்றப்படுங் கருமத்தின் கண்ணுய சிரமமும் கடுகளவு பயனையும் பயவாதாம். ஆதலின் எக்காரியங்கள் செய்யினும் மெய்ஞ்ஞானமடைய உத்தேசித்தே செய்யின் நலமாம் என்னுங்

இவையே இறைவனாலாற்றிய அநாதி அபௌருஷேயமாய வேதத்தின் முடிவாய முரச முழக்கும் டிம் டிமமாமென்றுணர்க. 21

22. அலமகத்தினா லமரு யோகமா மதனால், அலமயின்றதா லமளா வறுந்தனங் களினால். நிலையு றும்பரப் பிரமத்தை நெஞ்சினே யுணரின், எலமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) யாகத்தினாற் கிடைக்க அதிக்கிய பலன் இனி அமையும்; அரிய யோகத்தினால் கிடைக்க சித்த ஒருமைப்பாடு முதலிய பலன்களும் சித்தி முதலனவும் இனியமையும். இதுகாறும் புசித்த போகங்களா லுண்டாய பலமு மினி யமையும். அளவற்ற தனங்களினால் மகிழ்வடைந்ததுவு மினியமையும். இத்தகைய அமைதியாவது எத்தகைய வஸ்துவை உணர்ந்த பின் உண்டாமென்று சொல்லெனின்? என்றும் பொன்றாத பரிபூரணமாய் பரமானந்த தேஜோமயமாகிய அத்விதீய பரப்பிரஹ்மத்தை இருதயத்தின் கண்ணே தனது வடிவமாய் ஐயந்திரிபறச் சாக்ஷாத்கரிக்கின் ஆம் என்க. என்னுமிவையே யாவரையும் நியாமகப்படுத்தும் மறை முடிவாய முரச முழக்கும் டிம் டிம ஓசைகளாமென்றுணர்க. 22

23. அலம றைகளா லலமரு நூற்களா மவ
ற்றல், அலமி ருதிக ளரும்புரா ணங்களா மவற்
றால்,நிலையு றம்பரப் பிரமத்தை நெஞ்சினி னுண
ரின், எலமறைமுடி முரசறை டிண்டிம மிவை
யே.

(இ - ள்.) அரிய வேதங்களை அத்தியய
னஞ் செய்தலால் செய்வித்தலால் கிடைக்கும்
பலனும் இனியமையும். அருமையாய வேதத்தி
னங்கங்களைப் படித்தலால கிடைக்கும் பயனு
மினியமையும். அருமையாய சாஸ்திரங்களைப்
படிப்பதாற் கிடைக்கும் பலனு மினியமையும்.
அருமையாய ஸ்மிருதிகளைப்படித்தலாற் கிடை
க்கும் பலனு மினியமையும். அருமையானபுரா
ணங்களைப்படிப்பதால் கிடைக்கும் பலனு மினி
யமையும். இவ்வாறாறும் சாந்தியானது எவ்
வாறுண்டாமெனின், நித்தியமாய், நிர்மலமாய்,
நிர்க்குணமாய், நிஷ்கிரியமாய், நிரந்தரஞ் சுக
வடிவமாய் இலங்கும் பரப்பிரஹ்ம சொரூபத்
தை நெஞ்சின் கண்ணே ஆகாதிகளை அகம்
அலவென நீக்கி அகமென உணரின் அன்றே
யாமென்க, என்னுமிவையே அபரிமிதமாய
மாண்மை யுடைய உபநிடத முரசானது டிம்
டிம் என்றறையுங் கோஷங்களாம். 23

24. பயனி ருக்குவா லிலையஜு ஷாலுமே
பயன்றன், ஈயம னுவிலைச் சாமமு மங்கனே

நாடின், உயம்பி ரமால் லான்மவின் னுணர்வது வுதிக்கின், இயன்ம றைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்.) பாதகங்களாற் கட்டப்பட்ட கா யத்ரியாதிச் சந்தனிஷேஷ்டங்களாய இருக்குகளே அத்தியயனஞ் செய்வதாலும் பொருடெரிதலா லும் பயனில்லை. நிதனிஷேஷ்ட சாமங்களே அத்தி யயனம் செய்வதாலும் பொருடெரிதலாலும் பயனில்லை. இவ்விரண்டினாலும் வேறுபவாய யசுர்க்களே அத்தியயனம் செய்வதாலும் பொருடெரிதலாலும் பயனில்லை. ஏதனாலென்றெனின், உயர்ந்த பிரஹ்மாத்ம ஞானமுண்டாய்விடின் எனக. என்னும் இவையே வேதாந்தமாக டிம்டிம் னைக் கோஷிக்கும் கோஷங்களாம். 24

25. வினைகள் யாவையும் விமனத் தூய் மையின் பொருட்டாம், தன்யு பாசனை சலிமன வொருமையைச் சார்வான், தனிபி ரமவிஞ் ஞா னமோ நல்கமுத் தியினை, இனிம றைமுடி முர சறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) யாக தான ஓபாதிய சர்வ கர் மங்களும் சுற்றுஞ் சித்த சுத்தியின் பொருட் டாம். ஒப்பற்ற உபாசனை சஞ்சலமான மனத் தை யொருமுகப்படுத்தற் பொருட்டாம். பிர ஹ்மாத்ம அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்

காரமோ அனர்த்தநிவிருத்தி ஆனந்தப் பிராப்தி வடிவ முத்தியடைவித்தற் பொருட்டாம் என்னும் இவற்றையே மாதர்ப சுபாவத்தை யுடைய வேதமுடி முரசு டிம்டிம் என ஆனந்தத்துடன் கோஷிக்கும் 25

26\. சிதையு மெய்யுணர் வழலினாற் சேர்ந்தநீள் வினைகள், சிதையு மேல்வினை யாவையுஞ் சிவணுகர் வினையோ, சிதையிற் சித்தமி லனுபவஞ் சேறிதலால் வீடாம், இதம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) *மெய்ஞ்ஞானத் தீயால், நெடுங்காலமாய்ச் சம்பாதித்துச் சேர்ந்துள்ள சஞ்சித கர்மங்கள் பஸ்மமாம். ஆகாமிய கர்மங்களோ, அகர்த்தா யான் என்னும் ஞானத்தால் நாசமாம். பிராரப்த கர்மங்களோ, பற்றின்றிப் புசித்ததால் ஒழியும்; ஒழியவே, தடையின்றிய வழி ஞான சமஸ்காரத் தானே விட்சேப அம்சம் கெடும்; கெடவே விதேக முத்தியுண்டாம் என்னும் இவையே ஆகமாந்த முரசு அனுதினம் முழக்கும் டிண்டிம முழக்கமா மென்ப.* 26

27\. அறமு ஞற்றலா லாக்கமு மடமலா மறத்தை, நிறையு ஞறலா லழிவது நித்திய வசங்கப், போறிய றிகிலா வான்மான் னட்டரைப்

பொருந்தா, இறைமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) தர்மத்தைச் செய்தலான் விருத்தியும், அதர்மத்தைச் செய்தலான் ஹானியும், நித்திய அசங்க நின்மல அப்பிரமேய அசலவிமல ஆன்மாவின்கண் ஆருடாப சகசநிட்டையைத் தீண்டமாட்டா என்பதே வேதாந்த முரசு டிம்டிம் என முழக்கும் முழக்கமாமென்ப. 27

28. மதிக துவற மருவிய மறச்செய லேவையும், மதிக துவற மருவிய மறச்செய லேவையும், சிதைவுறச்செயுஞ் செயலதோ சிற்சுக வுணர்வாம், இதம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) புத்திபூர்வகமாய்ச் செய்தபாவகர்மங்கள் யாவும், அபுத்திபூர்வகமாய்ச் செய்த பாவகர்மங்கள் யாவும், அழிந்தொழிவதற்காகச் செய்யத்தக்க செயல் யாதெனின், அற்புதமன்றோ! சிற்சுகானந்த சிவபெருமானைத் தன்வடிவமாய்ச் சாக்ஷாத்காரஞ் செய்யுஞ் செயலாம் என்னுமிவையே யாவருக்கும் இதத்தையே உபதேசிக்கும் எழுதாமறைமுடி முரசு டிம்டிம் என முழக்கும் முழக்கமாமென்ப. 28

29. திருக்கி ஞேறேக் திருசியக் திகழ்பொரு ளிரண்டாம், இருக்கு மொன்றற்கோன் றேண் ணும்வேற் றுமையினை யியைக்தே, திருக்கோரு சிவம் திருசிய மாயையே யாதும், இருக்கின் மா முடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) இவ்வுலகின்கண்ணே திருக்கென்றும், திருசியமென்றும் இரண்டுபொருள்க ளுள்ளனவாம். அவைகளே பரஸ்பரம் வேற்றுமையை யுற்று நிற்கும். அஃதாவது:—திருக்கானது சச்சிதானந்த நித்திய பூரணமா யிருக்கும்; திருசியமானது அசத்து, ஜட, துக்க, அநித்திய, கண்டமா யிருக்கும். அத்தகையன யாவையெனின், உரைக்கப்படுகின்றது:—திருக் வஸ்துவானது ஒப்பற்ற பரிபூர்ண பரமானந்த பரமசிவமே யாம். திருசிய வஸ்துவானது சர்வதுக்கங்களையும் பயக்கும் மாயையும் மாயாகாரியங்களாய தேகாதிகளுமாம் என்று மிவையே இருக்கென்னும் வேதசிகாமய முரசு கோஷிக்கும் டிம்டிம் என்னும் கோஷங்களாம். * 29

30. உயிர வித்தையை யுபாதியேன் றுடையது வாகுஞ், செயிர்செய் மாயையு பாதியேன் றுடையது சிவனும், பயில வித்தைமா யைக்கு ணம் பாழிய தேகம்,செயின்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) அவித்தையை உபாதியாக வுடைய சேதனம் ஜீவனெனப்படும்; மாயையை உபாதியாகவுடைய சேதனம் ஈசுவரனெனப்படும். நவின்ற அவித்தைமாயை, அதன் குணங்கள் என்பனவற்றின் சம்பந்தமற்றது யாதோ அதுவே சுத்த சுகமாய பரசிவ மெனப்படும். ஆதலின் அத்தகைய சுத்த சொரூபத்தையே அதிகாரிகள் இனிது முயன்று தமது வடிவமாய் உணர்ந்து கோடல்வேண்டும்; உணர்ந்து கொள்ளினே அவற்றால் வருந்துயர் யாதொன்று மணுகாதாம் என்னுமிவற்றையே ஒருவராலும் செய்யப்படாது அநாதியாய் நிகழும் வேதமுடிபாய முரசு டிம்டிம் எனக் கோஷிக்குமென்ப. 30

31. எதுவுருவோடு மருவமு மருவியே யிரு
க்கும், எதுகுணமோடு நிர்க்குண மருவியே யிரு
க்கும், அதுபரமநற் பிரமத்துவமதா யமரும்,
இதமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) எந்த வஸ்துவானது ஆகாரத்தோடு கூடி நிகழுமோ, எந்த வஸ்துவானது நிராகாரமா யிலங்குமோ, எந்த வஸ்துவானது நிர்க்குணமா யிலங்குமோ, எந்த வஸ்துவானது குணத்தோடுகூடி யிலங்குமோ, அந்த வஸ்து சச்சிதாநந்தமயப் பரப்பிரஹ்மமே யாம்; அதுவே சர்வான்மகமா யிருத்தலின். உபாதி

யோடு கூடிச் சாகார சகுணமாயும், உபாதி யற்று நிராகார நிர்க்குணமாயும் நிலவுமென்பது அபிப்பிராயமாம் என்று மிவற்றையே மறை முடி முரசானது டிம் டிம் எனக் கோஷியா நிற்குமென் றுணர்ந்து கொள்க. 31

32. விதிப யிறலாற் றவிஜனும் வேத மோ துதலான்,மதிகோள் விப்பிரன் மங்கல வும லமெய்ப் பிரம,மதியே றதலாற் பிராமணப் பான் மையை மருவும்,இதம றைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ-ள்) விதிப்பிரகாரம் வினைகளை வழுவா மற் சிரத்தையோடும் செய்தலால் இருபிறப் பாளத் தன்மை யுண்டாம்; குருமுகமாய் வேதாத்தியயனம் செய்தலால் விப்பிரத் தன் மை யுண்டாம். மங்கலமாய்ச் சகல மலரகித மாய்ச் சத்தியசிற் சுகமாய் இலகும் பிரஹ்ம சொரூபத்தை யுணர்தலால் பிராஹ்மணத் தன் மையை மருவும் என்னும் இவையே தர்மத் தையும் பிரஹ்மத்தையும் பிரதிபாதிக்கும் அறுதி அபௌருஷேயமாய வேதாந்த முரசா னது டிம்டிம் எனக் கோஷிக்கும் ஓசைக ளாம். 32

33. பிரம மியாவுமாய் நிலைபெறு மிவணே. லா வுலகும், பிரம மாகவே நிலைபெறுங் காரிய மேவையும், அருமை யாகிய காரணந் தனினய

லவாம். இருமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) பிரஹ்ம வஸ்துவானது எல்லாப் பொருள்களாயு மிருக்கும். எல்லாப் பொருள்களுமே பிரஹ்ம சொரூபமாயே நிலைபெற் றிருக்கும். என்னை? காரியமெல்லாவையுங் காரணத்தினின்றும் வேறாய் விளங்காமையின். உயர்ந்த சத்தைபோடுகூடிய காரணத்தினின்றேனும் சமானசத்தையோடு கூடிய காரணத்தினின்றேனும் தோற்றுகின்ற காரியமானது காரணத்தினும் வேறாய்க் கண்டிலேம்; பழுதைப் பாம்பு, மட்குடம் போலவாம். உண்மையிலோ யாண்டும் சேதனமே காரணமாகலின் விவர்த்தமே யன்றாம் என்னு மிவற்றையே மறைமுடி முரசு டிண்டிமம் எனக் கோஷியா நிற்கும். 33

34. உண்டி லகுற லின்பமென் றுரைத் திடு மூன்று,மெண்டி சையுள யாவினு மிலங்குறு மதனான், மண்டி யாவையும் பிரமநல் வடிவு மாய் மலரும், பண்டைச் சொன்முடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) இருத்தல், இலங்குதல், இன்பமாதல் என்று வழங்கும் மூன்றும் எல்லாத் திசைகளிலு முள்ள சர்வ பதார்த்தங்களிடத் தும் இலங்கா நிற்கும். அக்காரணத்தான் எல்லாப் பொருள்களும் பிரஹ்ம சொரூபமாயே

ஒளிரா நிற்கும். அஸ்தி, பாதி, பிரியம், ரூபம்,
நாமம் என்னும் ஐந்தன் வடிவமாம் உலகமெ
ன்ப. அவற்றுள் முதன்மூன்றும் அபாத்தி
யப் பிரஹ்மாங்கிசம், பின்னிரண்டும் பாத்திய
மாய மாயாங்கிசம்; பின்னிரண்டுங் கற்பித
மாதலின், கற்பிதத்திற்கு அதிஷ்டானசத்தை
யினு மதிரித்த சத்தை யின்மையின், முன்மூன்
றூப அதிஷ்டான வடிவமேயாம் என்னுமிவற்
றையே மறைமுடி முரசு டிம்டிம் எனக் கோஷி
யா நிற்கும். 34

35. எதுத னக்குற மவத்தைகள் மும்
மையு மினிதாய்,விதமுற விளையாடு மிடமதாய்
விரவு, மதிக துவதே பிரமமென் றுண ருக
மயனித், திதம றைமுடி முரசறை டிண்டிம
மிவையே.

(இ - ள்.) எந்த வஸ்துவினிடத்து ஆரோபித
புண்ணியபாவ மிசிர கருமத்தால் உண்டாம்
நனவு கனவு துயில் என்னும் மூன்று அவஸ்
தைகளும் இன்பமாகப் பலவகையாய் விளையா
டுவதற்கு இடமாய் நிற்குமோ அத்தகைய
சுத்த புத்திசோகசா வஸ்துவே பிரஹ்ம வடிவ
மென் றுணருக. எங்ஙனமெனின், அசம்பாவ
னை விபரீதபாவனைகளற வென்க. அசங்க ஆன்
மாவிற்குறும் விளையாட்டும் உபாதியாலாயதே
யாம். அதனாற்றான் உண்மையுணர்ந்த பெரி

பார்க்கும் யாதொன்று மருவாத தென்ப தாம். வருமதிகாரிகளும் அத்துவைதவஸ்துவை யே யகமெனவுணரின் சர்வ அனர்த்தங்களும் நீங்கிச் சுகமாயிருத்தல் கூடுமென்பதொருதலை யேயாம் என்னுமிவற்றையே மறைமுடி முரசு டிம் டிம் எனக் கோஷியா நிற்குமென்க. 35

36. எதுமு தலினி லிலைமுடி பினினு
மே யிலையாம், அது இடையினி லிலங்கினு
மசத்ததே யாகும், விதித மாதலி னுலகெலாம்
வெறும்பொய்யே யாகு, மிதும றைமுடி முரச
றை டிண்டிம மிவையே.

(இ - ள்.) எவ்வஸ்துவானது ஆதியி லில்லாததாமோ, எவ்வஸ்துவானது அந்தத்திலில்லாததாமோ அது மத்தியில் இருப்பதுபோற் றோன்றினு மில்லாததேயாகும். எக்காரணத்தாலது அசத்தாமோ அக்காரணத்தாலது அத்தியந்தம் மித்தையேயாகும். இரஜ்ஜு அவச்சின்ன சேதனத்தின் கண்ணே கற்பிதமாய சர்ப்பமானது முன்னும் பின்னும் இல்லாது மத்தியிற் றோற்றுதலின் ஆண்டுமது இல்லாததேயாம். ஆதலி னது அத்தியந்தம் மித்தையாம். அதுபோல, பிரஹ்ம சேதனமாய நம்மிடத்தே மாயாமனத்தாற் கற்பிக்கு முன்னரில்லாததாய் அகண்டப் பிரஹ்மாகாரவிருத்தி ஞானம் உண்டானபின்ன ரில்லாததாய் இடை

யில் இலகா நிற்கு மிப்பிரபஞ்சமானது இடையி னும் இல்லாததேயாகும். ஆதலின், இஃதும் அத்தியந்தம் மித்தையாம். இத்தகைய அத்திய ந்தம் மித்தையாய வுலகத்தே ஆசக்தியுறாமல் அகண்டானந்த அமல அத்விதீய வத்துவின் கண்ணே மனத்தை நிலைபெறுமாறு நிறுவிச் சந்ததம் சகசநிட்டைபெற்று இன்புறல் வேண் டும் என்னு மிவற்றையே, இதத்தையே யுப தேசிக்கும் வேதமுடியாகிய முரசானது டிம் டிம் என யாவருங்கேட்டின்புற முழக்குமென் றன்றோ ரறைவர். 36

37. எது முதலினி லிருந்திடு முடிபினு மிருக்கு, மேது விடையினு மிலங்குறுஞ் சுயமதா யினிதே, அதுபி ரமமே யேகமே யவ்விது மெய் யே, இதுமறைமுடி முரசறை டிண்டிம மிவை யே.

(இ-ள்.) எந்த வத்துவானது காரியமுண் டாவதற்கு முன்னிருக்குமோ, எந்த வத்து வானது காரியம் அழிந்த பின்னரும் இருக் குமோ, எந்த வத்துவானது காரியந் தோற்று றுங் காலத்தும் தோற்றும் வத்துவிற்குச் சத் தாஸ்பூர்த்தியை (இருப்பு விளக்கத்தை)க் கொ டுத்துக்கொண்டு சுயமாய் அஃதாவது நிரபேக்ஷி கமாய் அஃதாவது தன் பிரகாசத்தே மற்றொன் றை யபேக்ஷியாததாய் இலங்காநிற்குமோ, அந்த

வத்துப் பிரஹ்மமேயாம். அதுவுமொன்றே யாம். இந்தப் பிரத்தியக் வஸ்துவின் வடிவமரி பிராநின்றஅஃதாவது தேகத்துறையுங் கூடத்த வடிவமா யிராநின்ற அந்த வத்துச் சத்தியமே யாம். சண்டுக் கூடத்த வடிவமாய்ப் பிரஹ்மத் தைச் செப்பியது பரோக்ஷமயல் நீக்கும் பொ ருட்டாம். இங்ஙனம் கூடத்த வத்துவைப் பிர ஹ்ம வடிவமாய்ச் சிந்தைசெய்யின் பரிச்சின்ன மயல் நீக்குமென் றுணர்க. உண்மையாய இதன்னிட்டு மருளல் வெண்மையேயாம் என் னும் இவற்றையே மாதாவை சிகர்த்த வேதா ந்த முரசு டிம் டிம் என ரிந்தாங் கோஷிக் கும். 37

38. புருட ரால்விழை யுற்றிடும் பொருள் கண்மூன் றதனுற், றிருட மாய்வளை பட்டவர் திரிபசு வாவர், தெருட ருமுத்தி விழைந்தவன் சிறந்தவ னவன், இம்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) புருடர்களாலே அவாவப்பட்ட அறம் பொருள் இன்பம் என்னு மூன்று புரு டார்த்தங்களால் திடமாய்க் கட்டுப்பட்ட புரு டர்கள் கேவலும் மிருகங்களேயாவர். என்னே? அவை மூன்றும்,பிரத்தியக்ஷத்தாலும்,வினையா லுண்டாவது அழியு மென்னும் அனுமானத் தாலும், புண்ணியத்தாற் பொருந்தியபொன்

னுலகும் பொன்றுமென்னும் சுருதியானும், அநித்தியங்களாதலின். அத்தகைய அநித்தியங்களை விரும்பித்திரிபவர் ஓவிருகளிற் பசுக்களே யாவரென்க; இரண்டிற்கும் பேதமின்மையின் என்றுணர்ந்து கொள்க. ஞானத்தாலுண்டாம் அழியாத பேரின்ப வீட்டின்கண்ணே ஆசைவைத்த அதிகாரியானவன் மிகவும் மேன்மை மிக்கவனாவன். என்னை? நித்தியமாயதைப் பகுத்துணர்ந்து அதனை யடைவான் குருசுசுருஷையாதியின் கண்ணே முயன்று வருந்திச் சிரவணாதிகள் செய்து கொண்டிருத்தலினென்க. அவன் பிறப்பே உயர்ந்ததாம்; மற்றவற்றின் பிறப்பெல்லாம் தாழ்ந்தவாம் என்பதை ஜனனந்தீர்ந்தோருடைய பிறப்புயர்ந்ததாம், கீழ்வேசரிப் பிறப்பாமொழிந்தவெல்லாம் என்னும் ஆதிசூரவன் மொழியாலறிந்து கொள்க. இவற்றைப் பெருமை பொருந்திய வேதாந்த முரசு டிம்டிம் என்றுகோஷியா நிற்குமென்க. 38

39. மண்ணுறு குவமே மாத்திர மடிகடம்
பானை, கண்ணுறு தட்டியர் முதலன வெவையு
மே கபேப்பப், பண்ணுறு ரம்பல வுலகமும் பரப்
பிர மமதே, யெண்ணு மாமறை முரசறை
டிண்டிம மிதையே.

(இ-ள்.) கடம், பானை, கருதா நின்ற சுவர் முதலனவாய காரியங்கள் யாவும் காரணமாகிய மண்ணுருவ மாத்திரமேயாகும். என்னை? காரணத்தை விடுத்துக்காரியங்கள் சொன் மாத்திரமாகவே யிருப்பன வாதலினனும், முன்னும் பின்னும் இல்லாதனவாய், இடையிலும் தோற்றன்மாத்திரமாயிருப்பனவாதலினனும் என்றுணர்க. இதுபோலவே, மாயாசத்தியின் வயத்தாற் சேதனத்தின் கண்ணே விவர்த்தமாகத் தோற்றுகிற்கும் சகலவுலகங்களும் பரப்பிரஹ்ம ஸ்வரூபமேயாம். என்னை? அதிஷ்டானத்தின் கண்ணே தோற்றுகின்ற விவர்த்த பதார்த்தங்கள் அனவாதங் கற்பிதங்களேயாதலின், கற்பிதமாயஅவற்றிற்கு அதிஷ்டான சத்தையினும் அயற்சத்தை சித்தியாமையானும், அதிஷ்டானவடிவமாகவே அவை சேடித்து நிற்றலானும் என்றுணர்க. புனலிடத்தே தோற்றுகின்ற தரங்கபேனபுற்புதாதிகள் அப்புனலன்றிப் புழுதியாவது முண்டோ? அதுபோலச் சேதனத்திடத்தேதோற்றும் சகசிவபரங்கள்சேதனமன்றி அயலொன்றுமோவென இவண் ஊகித்துக் கொள்ளக்கிடந்தமையையுங் கண்டுகொள்க. என்று மிவற்றையே வேதாந்த முரசானது டிம்டிம் என யாவருங் கேட்கக் கோஷியா நிற்குமென்க. 39

40. ஆறினைக் கொன்று வென்றுமூன் றினையட ரிரண்டை, வேறெ னப்பிளங் தகி லத்தும்வே றதே யான, ஆறு மோன்றதிந் தமர் தலே யறைமறை மோக்ஷம், எறு மாமறை முர சறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் அரிஷட் வர்க்கத்தைக் கொன்று (இவற்றை வாசனை யின்றிவிடுத்து), புண்ணியகருமம், பாவகரு மம், மிசிரகருமம் என்னும் மூன்றினையும் வெ ற்றிகொண்டு, (புண்ணியகருமத்தே பல இச் சையை விடுத்து என்பது இரகசியம்), இக லோக ஆசை, பரலோக ஆசை என்னும் இர ண்டையும் அத்தியக்தம்விட்டு, யாவற்றிற்கும் வேறாக விளங்கும் சாந்தஸ்வரூபமாய ஏக அத் விதீயப் பிரஹ்மத்தை அப்பிரதிபக்த அபரோ க்ஷ சாக்ஷாத்காரஞ் செய்திருத்தலே சுருதியுள் ளறையும் மோக்ஷமாம். இதனினும் அதிகம் யாதொன்று மிலதாம். என்னை? யாவையும் இத னுக்கே அங்கமாய் நிகழுதலின் என்றுணர்க. என்னும் இவையே வேதாந்தப் பேரியானது டிம் டிம் என முழக்கும் முழக்கங்களாம். 40

41. ஆறி னைப்பிளங் தைக்தையும் பிளங் துமே நான்கை, மாறெ னப்பிளங் தம்மவோ மூன்றையு மடித்த, வேறென விதே திரண்

டிமை விரவுக வேகம், ஏறுமாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்) ஜரை, மரணம், பசி, தாகம், சோகம், மோகம், என்னும் ஷடூர்மிகளையும் பிளந்தெறிந்து, ஜீவான்மாப் பரமேசுவரனும் வேறென்றும், ஆன்மாவின் கண்ணே தோற்றும் கருத்திருத்தன்மை முதலியன உண்மையென்றும், மூன்று சரீரங்களாலும் வரைந்து கொண்ட ஆன்மா சங்கமுடைய தென்றும், உலக காரணத் தன்மையானே பிரஹ்மத்திற்கு விகாரித் தன்மையுண்டென்றும், காரணத்தினும் வேறாய்க் காணப்பட்ட பிரபஞ்சம் உண்மையென்றும், என்னும் பஞ்சப் பிரமங்களையும் பிளந்தெறிந்து. சித்த விருத்தி நித்திரையைப் பற்றும் இலயம், சித்த விருத்தி அன்னியத்தைப் பற்றும் விக்ஷேபம், சித்த விருத்தி இராகாதி வாசனையின் வசமாம் கஷாயம், சித்த விருத்தி சவிகற்பச் சுகத்தைச் சுவைக்கும் இரசாஸ்வாதம் என்னும் சமாதி விக்ன சதுஷ்டயத்தையும் முயன்று பிளந்தெறிந்து, சிரவணாதி காலத்தே தோற்றும் சர்வஜடவஸ்துவின் சாக்ஷாத்காரமாய பூதப்பிரதிபந்தம், பாவகருமத்தா லுண்டாம் காரியம் விருத்தியாதலாய வர்த்தமானப் பிரதிபந்தம், ஒரு புருடனிடத்தே தலை விசுவாசம் முதலியவற்றை ஏற்றும்

ஆற்றலை யுண்டாக்கும் தகர்வினைச் சேடமாய ஆகாமியப்பிரதிபந்தம், என்னும்பிரதிபந்தத்திர யத்தையும் பிளந்தெறிந்து, அஞ்ஞான பிரண் டையும், ஐயபிரண்டையும், அசம்பாவனை பிரண் டையும், விபரீத பாவனை பிரண்டையும் அத்தி யந்தம் விடுத்து (இவையே இருமைகளை வேதா ந்த சம்ஞை விளக்கத்தின் கண்ணே விரிவாய்க் காண்க). ஏக அத்விதீயமாய பிரமத்தையே தனதுருவமாக அறிந்து அனர்த்தங்களி னின் றும் நீங்கி ஆனந்த வடிவமா யிருக்குக என் னும் இவற்றையே வேதாந்த பேரியானது டிம் டிம் என்று யாவரு மின்புறக் கேட்குமாறு கோஷியா நிற்குமென் றுணர்க. 41

42. தேகம் யானல யானருந் தேகியே யான, தேக சாக்ஷியாமெனவுணர் திடத்திறன் மடம்போய், மோக மாம்பிறப் பிறப்பறு முத்தி யே யுண்டாம், ஏக நான்மறை முரசறை டிண் டிம மிதுவே.

(இ - ள்.) சருமாதி ஆறுதத்துவங்க ளால் யாக்கப்பெற்ற இம்மல மூத்திர பாண்ட மாந் தூலசரீரமாகிய தேகப்பிணம் யானன் றாம். என்னை? சதா துர்க்கந்தத்தோடு கூடி யிருத்தலினாலும், துயர்மயமா யிருத்தலினா லும், கணத்தில் அழிவுறுவதா யிருத்தலினா லும், பரிச்சின்ன பரிமாணத்தோடு கூடியிருத்

தலினாலும், சாவயவமா யிருத்தலினாலும், போகாலயமாயிருத்தலினாலும், என்னிதனக் காணப்படுதலினாலும், மற்றும் பிறவாற்றுமெ ன்க. தேகத்திற்கிறைவனாய்த் தேகத்தை நடா த்தும் தேகியேயாவன், யானே தேக சாக்ஷியாவன். தேகியே யான தேகசாக்ஷியா னென வுணர்ந்த இடத்தினானே (தேகியென் றது தேகத்திற் கிறைவனென்றபடி. தேக சாக்ஷியென்றது சாக்ஷித்தன்மையானே பரிபூ ரணத்தைத் தெரிவித்தபடியாம்; ஆகவே இக் கியஞான இடத்தினால்) அஞ்ஞானமானது நீங்கி, அஞ்ஞான காரியமாய மோகத்தால் உண் டென்று மதித்துள்ள ஜனனம் மரணம் என் பன முதலிய இடர்யாவும் நீங்கி ஆனந்தமய மாய முத்தியேயுண்டாம் என்னும் இவை யே வேதாந்தப் பேரி கோஷிக்கும் டிம்டிம் என்னுங் கோஷங்களாமென் றுணர்க. 42

43. ஓடு யிர்ப்புயா னல்லனக ழேளிர்தருந் தேவன், வாடு யிர்ப்பினாற் சான்றேன வயங்கு நிச் சயத்தாற், கூடு மிப்பசி தாகத்தின் குலவுப சாந்தி, தேடு மாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்.) சஞ்சரித்துக் கொ ண்டிருக்கும் பிராணன் யானல்லேன். என்னை? வாயுவின் விகாரமாயிருத்தலினாலும், உள்ளி

னும் வெளியிலும் போக்குவரத்துடைத்தா யிருத்தலினாலும், சடமாயிருத்தலினாலும், பாதந்திரமாயிருத்தலினாலும், சாவயவமாயிருத்தலினாலும், எனதெனக் காணப்படுதலினாலும் என்க. யான் பிராணனை வியவகரிக்கச்செய்யும் உயிர்ப்புக்குத் தேவனா யிருப்பவனாவேன். அத்தகைய யானே ஓடி வாடு முயிர்ப்புக்குச் சாக்ஷியா யிருக்கின்றேன் என்றுண்டாம் திடநிச்சயத்தால் (உயிர்ப்புக்குத் தேவனாந்தன்மை யானே ஜீவனைக்காண்பித்து அதன் சாக்ஷித் தன்மையானே அதற்குப் பரிபூரணபாவம் காண்பிக்கப்பட்டதாமெனவுணர்ந்து கொள்க. யானெனும் அபிமானத் தன்மையானே பரிச்சின்னபாவமும், அபிமான ரகிதத்தன்மை யானே அபரிச்சின்னபாவமும் ஆமென அறிந்துகொள்ள வேண்டியது) பிராண தர்மங்களாய பசிதாகங்களின் உபசாந்தியானது கூடுமென்க. என்னை? பிராணனுடையபிமானத்தை யடைந்து வியவகரியாது சமாதியுறினும், பிராணனது தர்மங்களிவையே யன்றிச் சான்றாய நந்தருமங்களிவை யன்றெனத் திரமுற வுணரினும் அவற்றின் உபசாந்தி கூடுமின் என்க. என்னுமிவற்றையே வேதாந்த பேரியானது டிம் டிம் என யாவருமினிது கேட்ப முழக்குமென்ப. 43

44. மனமு நானல ஞனரு மகிழ்தருந் தேவன்
மனமோ ளிர்கரி யாமென வயங்குகிச் சயத்தான்
மனவ ருங்கோடுஞ் சோகமும் மோகமு மடியும்
இனமை றைமுடி முரசறை டிண்டிம மிவையே

(இ-ள்) மனம் யானல்லேன். என்னை? காரணமா யிருத்தலினானும், அன்னகாரிய மாகிய சாவயவமா யிருத்தலினானும், சங்கற்ப விகற்பாத்மகமா யிருத்தலினானும், சந்ததஞ் சுழலுகையானும், கண்டு கூறக் காணப்படுகை யானும், இருக்கையைக் காணப்பட்டுச் சடமா யிருத்தலினானும், பூதகாரிய மாதலினானும், மற்றும் பிறவற்றானும் என்க. யானே அருவமாகிய ஆன்மதத்துவத்தைக் கொடுக்கும் தேவனாகிய மனத்தை விலக்குங் கரியென்னுஞ் சாக்ஷியாயுள்ளேன் என்றுண்டாக் கூடிச் சயத்தால் சுழுமையுக்கூற் பெருந்தவாரா நின்ற சோகமும் மோகமும் மடியும்; மடியவே, சுகவடிவமா யிலங்குவன். என்று மிவற்றையே உறுதியாகப் போதித்தைப் பரியும் வேதாந்த பேரிகை டிண்டிம் என்று முழக்கும். 44

45. புத்தி நானல ஞெனழிற் பூரணத் தேவன், புத்தியையறி கரியெனப் பொருந்து நிச் சயத்தாற், கத்தி ருத்துவ மாதிய கடிதினி னீங்கும், இத்தி ருமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) புத்தியானல்லேன், என்னை? காரணமாயிருத்தலினாலும், அன்ன காரியமாயிருத்தலினாலும், சாவயவமாயிருத்தலினாலும், நிச்சயாத்மகமாயிருத்தலினாலும், பலமாயொன்றைப் பிடித்தலினாலும், எனதெனக் காணப்படுவதினாலும், இதுவெனக் காணப்படுகின்றதாயிருத்தலினாலும், பூதகாரியமாதலினாலும், மற்றும் பிறவற்றாலுமென்க. யானோ நித்தியசுத்த தேசகாலவஸ்துபரிச்சேதமற்ற பூரணவடிவனாகிய புத்தியை யறியுஞ் சாக்ஷியாகவே யிருக்கின்றேன் எனவுண்டாகின்ற நிச்சயத்தால் ஜனனமரண சம்சாரத்திற்குப் பிரேரகமாகிய கர்மத்திரள்களை முதலிய கனமாகத்தினையும் ஒழிந்த இடங்கொடாது பறந்துபோம். என்னும் இவற்றையே இவ்வுலகத்திற் கமுதபானமாகிய வேதங்களின் சிரோபாகங்களாகிய பேரி டிம்டிம் என்று பயனுறுங்கேட்க முழக்கும். 45

16. மாயையானல னானிடர் மகிழ்வருந் தேவன், மாயை மையறு கர்மமென வுணர்நிச் சயத்தாற், பாப நுந்துயர் யாவுமே மஞ்சென்ப் பறக்கும், சருமாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) அஞ்ஞானமென்னும் அநாதியாயம் வாய்ந்தமாயை யானல்லேன். என்னை?

சத்து, அசத்து, சதசத்து, சாவயவம், நிரவயவம், சாவயவநிரவயவம், பின்னம் அபின்னம். பின்னாபின்னம் என்னும் நவவிதத்தாற் பகரற் கேலாததாயிருத்தலினாலும், அசத்தாதலினாலும், சடமாதலினாலும், துக்கமாதலினாலும், அநித்தமாதலினாலும், கண்டமாதலினாலும், சுருதியுக்தி யுலகசம்பந்தத்தான் முறையே துச்சமாயும், அநிர்வாச்சியமாயும், உண்மையாயும், தோற்றுதலினாலும், சேதனத்தை மறைத்தலினாலும், அனர்த்தங்கட்குக் காரணமாயிருத்தலினாலும், விபரீத ஞானத்தைப் பயத்தலினாலும், ஞானத்தாற் கெடுதலினாலும், சங்கோசவிகாசமாயிருத்தலினாலும், சுதந்திராசுதந்திரங்களோடுகூடி யிருத்தலினாலும் மற்றும் பிறவற்றானு மென்க; யானே மகிழ்ச்சி வாட்டங்களற்ற மாதேவனாகிய மாயையை யறியுங் கரியாகிய சாட்சி வடிவினன் ஜீவன் எனவுண்டாம் அப்பிரதிபந்தநிச்சயத்தால் அம்மாயையாலுண்டாந் துயர்யாவும் ஆடிக்காற்றில் இலவம்பஞ்சென்பறக்கும். இவ்வைந்துசெய்யுட்களானும் முறையே அன்னமய கோசமும் பிராணமய கோசமும், மனோமய கோசமும், விஞ்ஞானமய கோசமும், ஆனந்தமய கோசமும், கண்டிக்கப்பட்டனவெனவுணர்க. அவற்றின் விலட்சண ஆன்மாவே தானெனத் திடப்படுத்திய

வாறுங் காண்க. இவற்றையே நன்மறையைக் கொடுக்கும் உபநிடதப்பேரி டிம்டிம் என முழக்கும். 46

47. இவண மியான்கரி யெனவேவ னினி தினிற் பிரித்தே, தவமுறப்பல முறையறி தருதவ னவனே, உவமை யின்றிய முத்தனு முயர் வித்து வானும், இவண்மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) யாவன் உற்சாகத்தோடும் இந்தப் பிரகாரம் விவேசனஞ்செய்து தான் சங்காதங்களின் சாக்ஷியெனத் தவமானது விருத்தியாகுமாறு பலதடவை யறிவனோ, அவனே ஒப்பில்லாத உயர்ந்த வித்துவானாகிய ஜீவன் முத்தனும், விதேகமுத்தனும் ஆவன்; என்று மிவையே மறைச்சிரமுரச டிம்டிம் எனக் கோஷிக்கும் ஒலிசகளாம். 47

48. மாயை யினல ஞானதன் காரிய மலனே, தூயசான்றது நானலன் சுகபரனே, ஆய வையமி லறிவினன் முத்தியா மாமே, ஏய மாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) அறியாப்பொருளாகிய மாயையும் யானல்லேன், குறித்தறியும் பொருளாகிய அதன் காரியவுலகமும் யானல்லேன், அறியும் பொருளாகிய சாக்ஷியும், உபாதியுபஹித மாதலி-

றாலும், உண்மையி லுபாதியின்மையினாலும், உண்மையிலறியப்படுபொருளும் அறியப்படாப் பொருளுமின்மையினாலும் யானல்லேன்; மற்றோ, சுத்தபூரண நித்த சுகபரனே யானேவன் எனவுண்டாகிய அகண்டப்பிரஹ்மாகார விருத்தி ஞானத்தினன் முத்தி சித்திக்குமென்பதிலையமே யில்லையாம் என்னுமிவற்றையே பிராமாணிகமாயிலங்கும் பரிசுத்தமாய வேதாந்த பேரியானது டிம்டிம் என முழக்கும். 48

49. சருவ மியானலை னிறை சருவமுமாவேன், சருவ மென்னதிங் கென்பது சரிவெளிப்படையாம், அரிய வுண்மையை யறிந்திடி னரந்தையெங் கேயோ, இருமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) யாவற்றினும் விலக்ஷணனாயிருத் தலின் யான் யாவுமல்லேன். யான் நிறைந்திருக்கப்பட்ட யாவும் என்னின் அன்னியமாயின்மையின், சர்வான்மகத் தன்மையானே, யானே யாவேன், எனது சத்தாஸ்பூர்த்தியினானே இலங்குதலினாலும் எனது விவர்த்தமேயாதலினாலும் யாவுமிங் கென்ன தென்பது மிகவும் பிரசித்தமேயாகும்; இதிலையப்பாடே யில்லையென்பதுதன் கருத்தாம். அருமையாகிய இவ்வுண்மையை யறிந்திடில் அஃதாவது, அகமென அப்பிரதியக்கமாய்ச் சாக்ஷாத்கரிக்கின்

சர்வானர்த்தங்களும் யாண்டு சென்று விடுமோ அறியோம்;வாராமலே போய்விடுமென்றபடி; என்னுமிவையே மறைச்சிரமுரசு கோஷிக்கும் டிம்டிம் என்னும் ஓசைகளாமென்க. 49

50. உடன்முதற்பஞ்ச கோசத்துள் ளுறையுண்மை யாதிங்,கிடர றப்போலி தருமந்த வெழிலுண்மை தானே,அடிமுடிவறு மாத்துமாவைய மேயிலையாம், இடிமறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) அன்னமயாதி பஞ்ச கோசத்தினுள்ளே யிருந்திடாற இலங்குவ தெச்சத்தையோ, அச்சத்தையே அடிமுடியற்ற ஆன்மாவாகும். இதன் கண்ணே யாதொரையமு மின்றும் என்னு மிவற்றையே இடிக்கும் புத்திபுகட்டும் மறைமுடிமுரசு டிம்டிம் எனமுழக்கும். 50

51. மெய்ம்முதலைந்துகோ சத்துண் மிளிரொளிர் வேதுவிங், குய்தர வனுப விப்பதவ்வொளிர்வது தானே, நோய் தறிவுற மாத்துமாநுதலய லலவே, மெய்ம்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) தேகாதி ஐங்கோசத்துள்ளே விளங்காநிற்கும் எவ்விளக்கஞ் சர்வவியவகாரயோக்கியமாய் அனுபவிக்கப்படுமோ அவ்விளக்கமே சூக்கும விருத்தியா லறியத்தக்கதும் அறி

ருக்குமமுமாய ஆன்மாவாம். அதற்கு வேறாய் விளம்பப் பெற்றவை ஆன்மாவலவாம் என்று மிவற்றையே உண்மையான இதத்தை யுணர்த் தும் செய்யாமொழிச் சிரமுரசு டிம் டிம் என முழக்கும். 51

52. ஆக மாதியைங் கோசத்து ளமருமேப் பிரியம், வேக மாயனு பவத்துறும் விளம்புமப் பிரியம், சோக மேதுமி லாத்துமா கூடத்தன் சுயமாம், ஏக மாமறை முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) காய முதலிய ஐந்து கோசத் துள்ளிரா நின்ற எப்பிரியம் விரைகி லனுபவிக் கவருமோ அந்தப் பிரியமே சோகமுழுதுங் கடந்த சொன்மனங் கடந்த ஆன்மாவாகிய நிர் விகாரப்பொருளாம் அதுவே சுபஞ்சோதியாம் என்று மிவையே தனக்கொப்புயர்வற்ற மறை முடிமுரசு டிம்டிம் எனக் கோஷிக்குங் கோஷ ங்களாம். (இவை மூன்றுந் துவம்பதம் பற்றிய வாம்). 52

53. கம்மு தலிய பஞ்சபூ தத்திலே கது வும், விம்மு சத்தையா திலங்குறும் வியன்னரர் தமக்கு,அம்மரி யவுச்சத்தை யேபரப்பிரமந்தாம், இம்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) ஆகாசமுதலிய பஞ்ச பூதத்தே பொருந்தியிருக்கும் சத்தையாது தோற்று

நிற்குமோ ரர்கட்கு அருமையாகிய அச்சத்தையே பரப்பிரஹ்மமெனப்படும். (இருக்கின்றதென்பதற் கேதுவா யுள்ளது பரப்பிரமாக்ஷிசாமெனவுணர்க) என்னுமிவற்றையே மறைமுடி முரசு டிம்டிம் எனக் கோஷிக்கும். 53

54. வெளிமுத லைந்துபூ தத்தில் விரவு
மெவ் விளக்கம், வெளிவரு மொன்றவ் விளக்க
மே விமலமாய் நிறைந்து. களிதரும்பரப் பிரம
மாம் பொருளெனக் கவர்க, எளிம றைமுடி முர
சறை டிண்டிம மிவையே.

(இ - ள்) ஆகாய முதலிய ஐந்து பூதத்துள்ளுங் கலந்து விளங்கும் விளக்கம் யாதொன்று பிரத்தியக்ஷமாயனுபவிக்கப்படுகின்றதோ அவ்விளக்கமே நின்மலமாய் நிறைந்து சந்தோஷத்தைச் சந்ததங் கொடுக்கும் பரப்பிரமமாம் பொருளெனக் கிரகித்துக் கொள்க. (விளங்குகின்றதென்பதற் கேதுவா யுள்ளது பரப்பிரமாக்ஷிசமெனவுணர்க) என்று மிவற்றையே எளிதாயிதத்தையுணர்த்தும் மறைமுடி முரசு டிம் டிம் எனக் கோஷியாநிற்கும். 54

55. விண்முத லைந்துபூ தத்துள் விரவு
மெப்பிரியம், கண்மன வெருமந்த நற்பிரியமே
கதிர்சேர், அண்மையும்மதி ஞானமு மற்றதாம்
பிரமம், எண்மறைமுடி முரசறை டிண்டிம
மிவையே.

(இ-ள்) விண் முதலிய ஐந்து பூதங்களுள் கலந்து தோன்றும் பிரியம் யாது அனுபவிக்க வருமோ அந்தப் பிரியமே ஒளி பொருந்தியதும், தன்வடிவமாதலின் தூரமற்றதும், கிடைத்தற் கருமைத்தாகலின் சமீபமற்றதும் ஆகிய பரப்பிரமமென வுணர்க; (இனிய தென்பதற்கேதுவா யுள்ளது பரப்பிரமாங்கிசமென வுணர்க) என்று இவற்றையே யாவரும் பிரமாணமா யெண்ணித் தத்தங்கருமத்தை முயலவிது வாய வேத முடி முரசு டிண்டிமென முழக்கா நிற்கும். (இவை மூன்றுந் தற்பதம் பற்றியவாம். 55

56. உடன் முதலிய கோசத்தி னுள்ளுறை
யுண்மை, அடரேதுவது வம்பர மாதிபூ தத்தாம்,
இட ரளவைய தின்மையிற் பேதம திலையா,
எமே றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்) தேகமுதலிய பஞ்சகோசத்தின் உள்ளே யிருக்கும் சத்தையாதோ அதுவே வியோமமுதலிய பஞ்ச பூதத்தும் இருப்பதாம். இதைப்பாதிக்கும் பிரமாணமின்மையின் யாண்டும் ஒரே விதமாய்த் தோற்றுமிச் சத்தை பேதத்தினையடைய மாட்டாது. இஃது அசிபதத்தை யுணர்த்தும். என்னை? துவம்பதத்துக் குபாதியாய பஞ்சகோசத்தை நீக்கியும், தற்

பூதனுக் குபாதியாய பஞ்ச பூதத்தையும் உப லக்ஷணமாகச் சத்தப்பிரகிருதியையும் மாயை யையும் நீக்கியும் உபாதியற்ற ஒரு பிரமத்தை ஐக்கியவாயிலா யுணர்த்தலினென்க என்னு மிவற்றையை யாவரும் பிரமாணமா வெடுத்துக் கொள்ளும் வேத முடி முரசு டிம்டிம் என முழக்கும். 56

57. சச்சிதானந்த வுருவமாந் தன்மையி னேனே, சிற்சி வமதே யாத்துமாச் செறியைய மில்லையாம், மெச்ச ளவைக ளாவில மிளிர்தர லாமென, இச்சுருதியெப்ம் முரசறை டிண்டிம மிதுவே.

(இ — ள்) சிவமானது திரிகாலாபாத்திய மாயும், சுதந்திகமாயும், பரமப்பிரேமாஸ் பதமாயும், இங்ஙனமே போல ஜீவனும் சச்சி தானந்தத்தைப் புலப்படுத்தும். அவ்விரண்டிற் கிரிய ரூபமாக வேவையிலக்கலின் இவையிவர்கட் குப் பேதமொருகாலு மில்லையாகும்; உபாதி யின் பேதத்தாற் றோற்றினும் நிருபாதிகக்கட் கைக்கியங் கூடலில் அத்தியந்தஞ் சம்சயமே யின்றாமென்க. இவ்வாகமாத்திரமே யன்றி யா வரும் பிராமாணபூதமெனப் புகழும் வேதப் பிரமாணங்களும் அளவற்றன இவ்விடயத்தே யுள்ளனவாம்(அவற்றைக்காண விரும்பின் அவ ற்றை அதிவிஸ்தாரமா யியம்பும் ஸ்ரீ ஆன்ம

புராணத்தை கண்டுகொள்க) என்னு மிவற்றை யே வேதாந்த பேரியானது டிம்டிம் மென நிரந்தரம் யாவரும் கேட்ப முழக்கு மென்றுணர்க. 57

58. பெயரு ருவங்க ணியதங்க ளெல்லவாய்ப் பிறங்கு முயர்வ தின்றியே யெங்சணும் பிறந்திலினை யுறலாற் பெயரு ருவங்க ளற்றவே யாவையும் பேணின், இயன்ம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்) ஒவ்வொரு வஸ்துவிற்கு முரிய நாம ரூபமென்னு மிரண்டும் நியதமாயிராவாம்; என்னை? தாழ்வை யடையாது எங்கெத்தும் எக்காலும் வியபிசாரத்தை யடைதலின்; அஃதாமாறு:—பொன் முதலியவற்றைக் கடக கங்கணாதிகளாக வாக்கின் அந்நாமங்களையுங் குரிய வுருவங்களையும் அடையும், கிரீடகுண்டலாதிகளாக வாக்கினோ முன்னைம முன்னுருவங்களை யொழித்து வேறு நாம வேறுருவங்களை யடையும். இவ்வாறு கேயூராதிகளாயாக்கவாக்க நாமவுருவங்கள் பிறழ்ச்சி யடைந்துகொண்டே வரும்; எந்நாமவுருவமும் நிலைபெறுவாம். இவ்வண்ணமாராய்ந்து பார்க்கின் எல்லாப்பொருள்களும் பெயருருவங்க ளற்றனவாயே நிகழும். ஒன்றற்கும் இதுதான் பெயரெனவும்

இதுதான் உருவெனவும் நிச்சயிக்க வொண்ணாமையின்; இங்ஙனமாகவே, சத்து சித்து ஆனந்தம் நாமம் உருவம் என்னும் ஐந்தன் வடிவமாய வுலகம் மாயையின் அம்சமாய் வியபிசாரத்தோடு கூடியதாய் நிகழும் நாமவுருவத்தை விடவே, யாண்டும் வியபிசாரத்தை யடையாது அஸ்திபாதிப்பிரிய ரூபமாயிலங்கும் ஆன்மாவேயாகும். அஃதாவது பொன்னாலாக்கிய கடக கங்கண கிரீட குண்டல கேயூராதிகள் இருக்கின்றன, இலங்குகின்றன, பிரியமாயுள்ளன, வெனப் புலப்படும். ஆகையினால் தொடர்ந்து விடாது புலப்படும் சச்சிதானந்த மயமே யிவ்வுலகமாகும் என்பதாம். அஃது இத்தன்மையதே பூரணமாம்; பூரணத்தன்மையானே நித்தியமாம்; அதுவே தானாய்; தானேயதுவாம்; என்னுமிவ்வுண்மையைப் பிராமாணிகவியற்கையோடு கூடிய வேதாந்த முரசங்கள் டிம்டிம் என முழக்கா நிற்கும். 58

59. திருவு மஞ்சிவ சீவரின் பேதமோதெரிக்கின், மருவு மம்விளக் கத்தினான் மன்னுருவிளக்க, வுருவி னானெழின் மானமா முய்த்துணரெனவே, இரும றைமுழு முரசறை டிண்டிமணிவையே.

(இ - ள்) சச்சிதானந்த நித்திய பூரணமாய சிவத்திற்கும் சீவனுக்கும் உண்டெனப்

பேதையர் பிதற்றும் பேதமானது விளக்கத்தி னுடனே பார்க்கின் பொருந்தாதாம்; என்னை? சிவ மிலங்குகின்றது போலவே சீவனு மிலங்கலின் இங்ஙன மிலங்கல் வடிவமே அவ்விரண்டன் அபேதத்தே பிரமாணமாகும் என்று மிவற் றையே பெருமை வாய்ந்த வேதாந்த முரசமா னது டிம்டிம் என முழக்கும். 59

60. துரிய சற்சிவ சீவரின் பேதமோ துணி வாய்ப், பிரிய மாம்வடி வத்தினை னின்றெனப் பிறங்கும், பிரிய பேதத்தில் மானமின் றெனப் பேரி துணர்க, இரும றைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்) துரியத்தில் என்னு மொன் றைக் குறித்து நான்காவதாயிலங்கும் சிவத்திற் கும் ஜீவனுக்கும் உண்டெனப் பேதையர் பித ற்றும் பேதமானது பிரியத்தினுடனே பார்க்கின் பொருந்தாதாம்; என்னை? ஜீவம்பிரியமா யிருக் கின்றது போலவே சிவனும் பிரியமா யிருத்த லின்; அஃதாமாறு:—யாவற்றினும் தானே பிரி யன், தன்னை யணுகவணுகப் பிரியமதிகரிக் கும், தன்னிற்றூரமாய்ப் பிரியப்பிரியப் பிரியங் குறையும் எவ்வனிதியும் தானே பரமப் பிரியன் என்பதையும் இத்திட்டாந்தத்தாற் காண்க. பொருளைக் கைவிட்டுப் புதல்வனைக் காப்பன்.

பஞ்ச காலத்தே புதல்வனை விற்றுத் தேகத்தை காப்பன், காற்று முதலிய வற்றே தேகத்தை விட்டு இந்திரியங்களைக் காப்பன், சிரச்சேத முதலிய அரசதண்டனை வந்த காலத்தே இந்திரியங்களை விட்டுப்பிராணனைக் காப்பன், பிராண ஹானிவருமிடத்தே என் பிராணனைத் தானேவாங்குவன் வேறென்னை என்ன செய்வன் எனத் தன்னை விடாது பிடித்தலின் தானே யதிகப் பிரியனன்றோ' சிவம் தன்னி னன்னியமன்றாதலின் பரமப் பிரியத்திற் கிடமாமாறு முப்த்துணரத்தக்கதாம். பிரியபேதத்தே பிரமாண மின்மையின் சிவனே சீவனும் சீவனே சிவமாவன் என அகண்டப் பிரஹ்மாகார விருத்தியிலு ணுணர்க என்னு மிவற்றையே மாட்சிமை தங்கிய பூச்சிய வேதத்தின் முடிமுரசு டிம்டிமான முழக்குமென்றுணர்க.

61. துதித ருஞ்சிவ சீவரின் பேதமோ துகள் சேர்ந், துதித ரும்பெயர் வடிவம தாவுள தாகா, அதமு றம்பேர் வடிவமோ பொய்யதா மதனன், இதம றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்) யாவரும் மறைகளுந் தேவரும் போற்றும் சிவத்திற்கும் ஜீவனுக்கும் உண்டெனப் பேதையர் பிதற்றும் பேதமானது குற்றத்

ளோடு கூடிச் சிவன வியவகாரத்தாற் சனித்த ஜீவனென்னும் பெயரானும், அந்தக்கரணவச் சின்ன அல்லது அவித்தியாவச் சின்ன வடிவத் தானும், உபதேச நிமித்தமாயும் பஞ்ச கிருத் தியாதிகளை முன்னிட்டும் ஏற்பட்ட சிவ ஈசுவ ரப்பெயர்களானும், மாயோபகித மாயாவிசிஷ்ட வடிவத்தானும் உண்டாகமாட்டாதாம். அந்நாம வுருவங்கள் உபாதியாலாயவாமாதலின் அத னையே அவைபொய்யா மெனவுணர்க. அற் றாயின் சிவமும் ஈசுரனும் பொய்யாமாலோவெ னின், அற்றன்று; அவ்விரண்டிற்கு முறையே யுற்ற மாயோபகிதத் தன்மைக்கும் மாயா விசிஷ்டத்தன்மைக்கும் உபாதியாய மாயையா னது பொய்யாம். உபாதியும் விசேஷணமும் பொய்யாகவே, அப்பொய்ம்மையை மேற்றிக் கொண்ட உபகிதமும் விசிஷ்டமும் பொய் போற்றோன்றும்; உண்மையாலோ இருபாலுஞ் சேதன மென்று மழியாததெனவுணர்க. இவ்வாறே யத்தக்கான விசிஷ்டத்திற்கும் உப கிதத்திற்கும் பிரித்து மயலற வுணர்கவென்று மிவற்றையே மறை முடிப்பேரி டிம்டிம் என முழக்கா நிற்கும். 61

62. அறிவு ருச்சிவ சீவரின் பேதமோ வணு
காப், பெறுபிரமவண் டத்தோடு பிண்டவேற்
றுமையரின், உறைச மட்டியும் வியட்டியு மோ
ருமையா தலினே, இறைம றைமுடி முரசறை
டிண்டிம மிவையே.

(இ - ள்) சிற்சொரூபமாய் விளங்கும் சிவத்திற்கும் ஜீவனுக்கும் உண்டெனப் பேதையர் பிதற்றும் பேதமானது பிரமாண்ட பிண்ட வேற்றுமையானே யுண்டாகாதாம். என்னே? பிரமாண்டம் சமஷ்டியும், பிண்டம் வியஷ்டியும் ஆகி அவ்விரண்டும் ஏகமாயிலங்கலின். கருத்திதுவாம்:—பிண்டத்தி லுள்ளவையே அண்டத்திலும் அண்டத்திலுள்ளவையே பிண்டத்திலு மிருக்கின்றமையினும் பஞ்சபூத காரியமாய் இரண்டு மிருத்தலினும் மற்றும் பிறவற்றானு மிரண்டு மொன்றேயாம். விசுவ தைஜசப் பிராஞ்ஞ வடிவமாய்ப் பிண்டத்தைத் தாங்கும் அபிமானியே விராட் இரண்ய கர்ப்ப அந்தரியாமி வடிவமாய்ப் பிரமாண்டத்தைத் தாங்கும் அபிமானியாதலின், பிண்டப் பிரமாண்டாவச்சின்ன சேதனமும் ஒன்றே யாய்ப் பேதத்தை யடையாவா றுய்த்துணர்க. என்னுமிவற்றையே இறைவன் அநாயாசமாய் ஆற்றியருளிய எழுதாமறையின் சிரமுரசம் டிம்டிம்என முழக்கிக்கொண்டேயிருக்கும். 62

63. பிரம மேயுண்மை பேரிழை யுலகமோ பொய்யாம், பிரம மேயுயிர் பிறிதல விதனைமெய் யுணர்ந்த, அரிய வித்துவான் சீவனின் முத்தனே யாவன், இரும றைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ - ள்) முன்னின்மை பின்னின்மை, முற்றுமின்மை, ஒன்றொன்றன்மை என்னும் நான்கபாவங்களும் விடுபட்டிருப்பதாற் பிரஹ்மமே நித்திய வஸ்துவாம். இத் தன்மையினானே பரிபூரணத் தன்மையும் உள்ளவாறிவ்வாறும்:— முன்னின்மை பின்னின்மைகளின் எதிர்மறையாய கால பரிச்சேத மின்மையினாலும், முற்றுமின்மையின் எதிர்மறையாய தேச பரிச்சேத மின்மையினாலும், ஒன்றொன்றன்மையின் எதிர்மறையாய வஸ்து பரிச்சேத மின்மையினாலும், பரிபூரணத் தன்மையு முமென்பதாம். முக்காலத்திலும் பாதிக்கப்படாத வுண்மை வஸ்துவுமாம்; என்னை? தூல சரீரம் பாதிக்கப்பட்டகனவினும், சூக்ஷ்ம சரீரம் பாதிக்கப்பட்டதுயிலினும், காரண சரீரம் பாதிக்கப்பட்ட சமாதியினும் யாதொன்றாலும் பாதிக்கப்படாமல் பாவா பாவங்களைக் கண்டுகொண்டு சுயம்பிரகாசமா யிலங்கலினாலும், சர்வப் பிரபஞ்ச சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரமாயினும் சான்றாகவே அதிஷ்டான மாத்திரமா யிலங்கலினாலும் என்க. சந்ததங் துன்புறுவதற் கேதுவாய வுலகமோ நான்கபாவங்களோடு கூடினமையானே அநித்தியமாயும், முப்பரிச் சேதங்களோடு கூடிப் பரிச்சின்னமாயும் ஜடமாயும் திருசியமாயுமிருத்தலின் அத்தியர்தம் மித்தை

யாம். சர்வ அநர்த்தங்கட்கும் பீஜபூதமாம். பரிபூரண தற்பதலக்ஷியப் பிரஹ்மமே, துவம் பதலட்சியக் கூடஸ்தராம். கூடஸ்தரே பிரஹ்ம மாம்; சிறிதும் பேதமேயின்றும் என்னு மிவ்வரிய வுண்மையை யுணர்ந்தவன் ஜீவன் முத்தனெனவும், திடப் பிரஞ்ஞனெனவும், பகவற் பக்தனெனவும், குணாதீதனெனவும், அதிவருணாசிரமி யெனவும், பிரஹ்ம வித்தென வும், ஆத்மாராமனெனவுங் கூறப் பெறுவன். என்னுமிவற்றை வேதாந்த பேரியானது டிம் டிம் என நிரந்தரங் கோஷிக்கும். 63

64. சகல மும்பெய ருருவினைத் தணர்ந்த தாய்த் தயங்கும், புகழுஞ் சன்மய சின்மய பரம தாய்ப் பொலியும், இகழும் வேற்றுமை யாண்டே றும் பந்தந்தா னியாண்டோ, இக மறைமுடி முரசறை டிண்டிம மிஃதுவே.

(இ ள்.) எல்லாப் பொருள்களும் நாம ரூபங்கள் அற்றனவேயாம்; என்னை? அவை கற்பிதமாதலின், ஜீவர்களது மயங்கிய புத்தி பூர்வகமாய் வந்தனவாதலின், சந்ததம் பிறழ்ச்சி யுடையனவா மாதலின், இந்திரஜாலமென மெய்த மற்றனவாமாதலின், தொடர்ச்சி லங்கா தனவா மாதலின், மாயாகாரியங்களாமாதலின், இனிதாராயின் இல்லாமற் போவனவாமாதலி

னென்க. ஆனுலிவையாவு மென்மயமாயிலங்கு கின்றன வெனின், சன்மயமாய்ச்சின்மயமாய்ப் பரமானந்தமா யென்க. என்னை? ஆரோபங் கட் கதிஷ்டான சச்சிதானந்த சிவத்தை விடுத் துக் கதியின்மையின் அவையாவும் நாமரூப மறைப்பை நீக்கியமாத்திரத்தே சச்சிதானந்த மயமாயே விளங்குமென்பதாம். இவ்வாறாக வே உபாதிபாலாய பேதமானது யாங்ஙனம் நிலவும்? உபாதி காலத்திரயத்திலு மின்றாய வழி அதனாலாய பேதமு மின்றென்றபடி. பேதமிலதாகவே அதனாலாய பந்தந்தான் யாங் ஙனம் நிலவும்? பேதமே பந்தகாரண மென்ப தொருதலை யாதலின். என்னு மிவற்றையே இகத்தும் பரத்தும் சுகத்தை யருத்தும் வே தாந்த பேரியானது டிம்டிம் எனு முழக்கும்.

65. திண்மை யுடைய வடிவோடு குலட மாதியவாம், தண்மை யாம் பெயர் முதலவற் றாற்பிற முதலின், உண்மை யாகவோ வுலகரிங் கேவற் றையு முரையார், எண்மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ ள்) திடமாய் உலகர் விவகரிக்கும் வடுகுலடன் முதலிய பெயர் முதலியவற்றால் உண்மையாய் ஒன்றையு முரையார்; என்னை? வியபிசார மெய்தலின். (முன் விரித்தவற்றை

யுரைத்துக்கொள்க) என்னுமிவற்றையே யாவரும் பிரமாணமா யெண்ணிக் கையாடும் மறைமுடி முரசானது டிம்டிம் என முழக்குமென்ப. 65

66. விரி பெயரோடு முருவமாம் வடிவுடை விசுவம், பெரிய விந்திர சாலமென் றறிந்தனர் பெரியோர், ஒரு பெயரிலாத் தன்மையா லோவ் வுரு வதனுன், இரு மறைமுடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்.) விஸ்தாரமாகிய அநந்த நாம வுருவங்களோடு கூடி யிலங்கும் பிரபஞ்சமானது வித்தையாடியாற் காட்டிய விசித்திர சொப்ப மனோமயக்கத்தாற் றோற்றும் மகேந்திர ஜாலமாம் எனப் பிரஹ்மத்தைத் தம்முருவென வுணர்ந்த பெரியார் அறிந்தானந்தித் தனர். ஜகம் மானசமல்லா தொழியிற் றுயிலினுமன் றே தோன்றவேண்டுமே? அங்ஙனங் காணுமை யின் மானசமேயாமாதலின் மனத்தை யொடுக் கிச்சுகமுறல்வேண்டும்.ஜகம் மகேந்திரஜாலம், நியதமாய பெயரும் உருவமு மின்மையின், பொருத்தினும் பொருந்தாமையின் எனக் கொள்க. என்னுமிவற்றையே பிரமப் பிரமாதாதி பௌருஷேய குற்றங்களற்ற அபௌருஷேய மறைமுடிமுரச டிம்டிம் எனக் கோஷிக்குமென்ப. 66

67. பேத மின்றிய தரிசனம் பேரின்ப வீடாம், பேத மொன்றிய தரிசனம் பெருஞ்சமு சாரம், ஈதே லாமறை முடிபின்சித் தாந்தம தெனவாம், வேத மேம்முடி முரசறை டிண் டிம மிவையே.

(இ - ள்.) *பஞ்ச கோச விலக்ஷணமாய் அவஸ்தாத்திரய சாக்ஷியாய் தேகத்திரய வி்ய திரிக்தமாய்த் தன்னைத் தரிசித்துப் பின் சர் வோபாதிரகித பரிபூரண பரமான்மாவாகத் தன்னைக்கண்டு அத்தகைய தன்பாற் றோற்றும் சொன்மாத்திர வுலகைச் சின்மாத்திரமாய தன் மாத்திரமாய்க் காணும் பேதமின்றிய அபேததரிசனத்தானே என்றுமழியாத பே ரானந்த வீடுகிட்டும். இவ்வாறல்லாது சுருதி க்கு முரணாய்த் தன்னையும் சிவத்தையும் ஜகத் தையும் வேறுவேறாய்க் காணும் பேததரிச னத்தானே என்றும் மாறாத சம்சாரதுன்பமே கிட்டும். இதுதான் சர்வ வேதாந்த சித்தாந்த மாம் என்னுமிவற்றையே மறைமுடிமுரசு டிம் டிம் எனக் கோஷியா நிற்கும்.* 67

68. அதி சுகமதா மான்மமெய் யறிவின் றன்றி, மத ஒவ்வீதிவே சத்திறுற் பாடைகண் மகிழ்வாய்த், திர முறப்படித் தாடலாற் றெய்வவீ டெய்தா, இத மறைமுடி முரசறை டிண்டிம மிவையே.

(இ-ள்.) சுகவடிவமாகிய பிரமமான ஐக்கிய ஞானமொன்றினாலே அதிசுகத்தை யடைதல்கூடும். என்னை? பரிச்சின்னத்தே யெப்போதும் பயமேயிருத்தலினாலும், பயமுற்ற விடத்தே துக்கமேயல்லாமல் சுகலேசமுமின்மையாலும், சுகம்போற் றோற்றிலும் கணத்தே யழியும் சுகாபாசமே யல்லாது மெய்ச்சுக மன்றாதலினாலும், ஆராய்ந்து பார்க்கின் அதிப்பிரியம் பரிபூரணமாயதன் வடிவமே யாதலினாலும் அழிவில்லாதது சுகமாகுமே யல்லாது அழிவுடையது ஒருகாலும் சுகமாகாதாகலினாலும், அனுபவத்தும் சர்வசாக்ஷியாயிருந்து விளங்கிக்கொண்டிருத்தலே சுகமாகக் காணப்படுகின்றமையாலும் என்க. இவ்வான்ம ஞானமொழிந்து மற்றுமுள்ள சைவ வைஷ்ணவாதி மதாபிநிவேசத்தாலேலும் . அதிகுசலத்தோடும் பலபாஷைகளை யறிந்து கிரந்த வியாக்கியான வுபந்யாச கௌசலத்தன்மை யாலேலும் தெய்வத்தன்மையோடு கூடி விளங்கும் அனர்த்தநிவிருத்தி ஆனந்தப்பிராப்தி வடிவமோக்ஷமடைய முடியாதாம். என்னை? மதானுஷ்டான மாத்திரத்தைச்செய்து ஈசுவரகிருபையைப் பெற்று மோக்ஷத்தையடையாது பிறர் மதத்தே மாற்சரியங் கொண்டு தம்மதங் கேடுமென அபிநிவேசங்கொண்டு நிந்தித்து வாடுதலின்

வீண்காலம் கழித்தொழியா வளர்ந்த மெய்ந
லே கைகூடுமாதலினாலும் இராகத்வேஷ வாச
னையே யிடைவிடாது மனத்தின்கண்ணே குடி
கொள்ளுமாதலினாலும், ஈசுவர கிருபையைப்
பெறுதலே யரிதாதலினாலும், பெற்றோருண்
டெனினும், அவர் ஜீவர்களோடன்றி நேரே
பரமனிடத்தே துவேஷத்தை வைத்துப் பத்தி
செய்தனராதலினாலும், பரமனாகார விருத்தி
யை நிரந்தரம் உண்டுபண்ணுதலாற் பயன்படக்
கூடியதே யாதலினாலும், அன்றியு மத்தகையர்
ஒரோர் காரணம் பற்றிச் சாபானுக்கிரகயத்
தால் வந்தவராதலினாலும் அவர்நடந்தது அசா
தாரணமாதலின்நம்மனோர்யாவருக்கும்அஃதே
வழியன்மையானும், பிறநிந்தையிற் பயனின்
மையானும், குறித்தவொன்றையே தியானித்
தல் கடனாதலினாலும், ஸ்ரீ வியாசாதிகட்கும்
அஃதே நிருக்கருத்தாதலினாலும், வேதசாஸ்
திராதிகள் படித்துப் பொருள் கைக்கொண்டு
தன்னுண்மை வடிவத்தைக் கைக்கொள்ளாதொழி
யின் கேவலம் வயிறு வளர்க்கும் வியாபாரமே
யஃதாதலினாலும், கேவலம் ஜீவன் முக்தனா
யிருந்தான் மாத்திரம் பரோபகாரப் பொருட்டு
ஈசுவரானுக்கிரகத்தால் அவற்றிற் றலைப்படலா
மே யன்றி வேறுவகையால் இடம்பாகங்கார
மதுவே யஃதாதலினாலும்தன்பொருட்டன்றிப்

80. பரப்பி ரமமாக் தன்கணே பகரினைத்
தனையுந்,தரப்பே றமுறை மாறெனத் தனித்தனி
யடக்கி, நிரப்பு மத்வைத வான்மனை நிதம்படித்
திருப்பன், இருப்பு றமலை முரசறை டிண்டிம
மிவையே.

(இ - ள்.) தேசகாலவஸ்து பரிச்சேதரஹித பரப்பிரஹ்மமாகிய தன்வடிவத்தே யபலாற் றோற்றும் சர்வநிருபிய பதார்த்தங்களையும் உண்டாகிய முறைக்கு மாறாக யாதுயாது எவ் வெதன்கண் ணடக்கற்குரியதோ அவ்வதனை அவ்வதனின்கண் ணடக்கி யாவற்றினும் வியா பித்துச் சத்தா ஸ்பூர்த்தியைத் தந்துகொண் டிருக்கும் அத்வைத ஆன்மவடிவத்தை அனு தினமுங் காணஞ் செய்துகொண் டிருப்பவன் ஜீவன் முக்தன் என்னுமிவற்றையே அநாதி யாயே யிருக்கும் ஆகமமுடிவுமுராக டிம்டிம்என அறையாநிற்கு மென்ப. 80

81. பிரதி லோமநல் லானுலோ மங்களாற்
பெரிதும்,உரம மழுல குற்றிட லோழிந்திட வுளத்
தே,யுரமு றமிக வுன்னுற வெஞ்சுமா லுண்மை,
இரும றைமுடி முரசறைடிண்டிம மிவையே.

(இ - ள்.) கீழும் மேலும், மேலும் கீழும் ஆக அத்தியர்தம் மித்தையாய உலகம் உண் டாதலையும் ஒடுங்குதலையும் உள்ளத்தின்

கண்ணே யென்றுமாறு நன்றாக ஆரபவே உண்மைநிலை சேதித்து நிற்கும் என்று மிவற் றையே பிராற்பணமாக மந்திர பாகத்தோடு கூடி விளங்கும் மறைமுடி முரசானது டிம்டிம் என முழக்கும். 81

82. நாம மோரூத் தமையபி மானமாய் நயத்தல், தாம மீதுறை யாருயிர்க் காதுஞ்சம் சா ரம்,க்ஷேம மாய்ச்சச்சி தாநந்த திருட்டிநேர் தரலே, டேம மாமறை முடியறை டிண்டிம மீனவையே

(இ - ள்.) நாமரூபங்கள் பொருளென நினைந்து அவற்றை யபிமானித்து நிற்றலே ஆகத்தின் கண்ணுறை யாருயிர்கட்குச் சம் சாரமாகும். நியமமாகச் சச்சிதானந்த சிவஸ்வ ரூபமே யான் என்னும் திருட்டியை யடை வுறலே அசம்சாரமாகிய முத்தியாகும் என்று மிவற்றையே யுழினேற்றும் முடிப்பேரி டிம்டிம் என முழக்கும். 82

83. சத்துச் சித்தின்பஞ் சத்திய மேனவுரு நாம, மித்தை யெனறுணர் தரிசித்த ஞேயமென் மிகையோ, அத்தன் வீரமெய்ஞ் ஞானவா ரிய னரு ளணுகின்ஞ் முத்து மாமறை முடியறை டிண்டிம மீனவையே.

(இ - ள்.) இவ்வுலகின்கண்ணே கலந்து விளங்கும் அஸ்தி, பாதி, பிரியம், நாமம்,

உருவம், என்னுமைந்தனுள் முதன் மூன்று அம்சம்சத்தியமெனவும் அதுவேயானெனவும் மற்றைய இரண்டம்சத்தையும் மித்தையெனவும் அறிந்து நீக்கிவிடின், தோற்றமாத்திரமாம் இவ்வுலகம் எம்மாத்திரம்? என்செய்யும்? மித்தையாகத் தோற்றுமானுற் றோற்றுகதானிது; அத்துணையாற் றத்துவ வித்தாகிய எனக்குண்டாம் ஹானி யாதாம்? சித்தமயக்கத்தாலுண்டாம் கனவின்கண்ணே அச்சத்தைத்தரும் யானைமுதலியவை தோற்றினும் இது சொப்பனமெனக் காண்போனுக்குப் பீதியை யுண்டாக்குமா என்? சர்வலோக கருத்தாவாகிய வீரம் பொருந்திய ஸ்ரீகணேசப் பெருமானாகிய ஞானசிரியருடைய பூரணகிருபை யிருப்பின் சுலபசபலமாம் என்னுமிவற்றையே பழமையாகியமறைமுடிமுரசு டிம்டிம் எனக்கோஷிக்கும்.

84. உடைய த[illegible]மன்றுநீ ராலம்ப
மலவா, மடைய வேபற்றி நிற்றலுக் காதர வா
குந் தடையி லாலம்பத் தாற்சகு வாலம்ப மா
மென், றிடைய றமறை முரசறை டிண்டிம
மிவையே.

(இ-ள்.) உண்மைபாய இருட்டியா லாராய்ந்து நோக்கின் சைதன்ய சிவமானது பற்றுக் கோடேற்றதும் அற்றதும் அன்றாம்; ஆயினும், அவித்தையின் சம்சர்க்கத்தால் எல்லாப் பற்

(இ - ள்.) அறம்பாவங்கள் என்பவை சுப மாகப் பொய்யுபாதிபோல் கூடியிருக்குஞ்சாக்ஷி யாற் காணப்பெற்ற போலிப்புருவுடைய சிதாபா சனையும் நீண்டவே மாட்டா; உண்மையாக இதனையே நீண்டாதபோது அத்தியந்தம் நின் மலமாய் யாவற்றிற்கும் அதிஷ்டானமா யிருக் கும் பிரஹ்ம வஸ்துவைத் தீண்டுமென்பது யாங்ஙனமாம்? ஆகாதென்க என்றுமிவற்றைத் தே அஞ்ஞானத்தைக் கெடுக்கு மறைமுடி முரசானது டிம்டிமம் என முழங்கும். 88

89. மயல்கோ ளேபெற லமையுமந் தோமகி ழ்ந்தாம், உயிரோ ருசிவ மெனவின்று மோனச் செவிக் கினிதாய்ப், பயம றமறை முரசொலி பகர் தரக் கேட்டேம், வியனி றைதரும் வீரசே கர முனி யருளால்.

(இ - ள்.) இ[illegible] வரை மயக்கத்தைத் துணையாகக் கொண்டு பெற்ற பலன்போதும் போதும், அந்தோ அந்தோ! நாந்தாம் என்ன மூடத்தனத்துடன் சஞ்சரித்தோம்! விடயத் தாழ்ந்து மகிழ்ந்தோமே! நமது வடிவமானது ஒப்பற்ற சிவமென்ன இன்றுகூடக் கேட்டுஞ் செவிக்கு அமிழ்து வார்த்ததொப்ப இனிமை யுறப் பயமறுச் சுருதிசிகர முரசொலியை நமதாசிரியரது திவ்வியதிருவருளாற் கேட்டோம்.

90. பிரதி வாதியின் பயங்கர மறைமுடிப் பேரி, தருதிண் ஞோசையைத் தக்ஷிணா மூர்த்தியின் றயவாற், கருத மேலவர் கருதிநோ ரேங் கவநுக களிப்பாய், விருது கொண்டெழும் வீரசேகரன்பதம் விதியே.

(இ-ள்.) பிரதிவாதிகட்குப் பயங்கரத்தை யுண்டாக்கும் வேதாந்த பேரியினின்றுங் கிளர்ம்பிய பெருந்தொனியைத் தயிரியமா யாற்றிய பெருந்தவத்தாற் கிடைத்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் பேரருளால் ஆராய்ச்சி மிக்க பெரியோர் ஏகாக்கிர சித்தத்தோடிருந்து கவர்ந்து கொள்ளுக. கொள்ளவே, அழிவில்லாத பேரானந்தம் உண்டாம். ஞானோபதேசஞ் செய்து அஞ்ஞானத்தை நீக்குவதன் பொருட்டே கொடிக்கட்டி விளங்கும் நமது ஞானசிரியரது திருவடித் தாமரையிட்ட விதியே நமக்கு நியமம். 90

91. செய்ய வீரசேகரன் திருவடி தோற்றே, துய்ய மாமறை முடிமுரசருந்தமிழ்த் தான்றாம், இவ்வையுற வாரியாருமறை பரவிப், [illegible]ய்யிலாமனம் பொலிதரல் புனிதர்தங் கடனே

வேதாந்த டிண்டிமம் முற்றும்

சுபம்.

வைராக்கிய டிண்டிமம்.

காமஃ க்ரோதஶ்ச லோபஶ்ச
தேஹே திஷ்டந்தி தஸ்கராஃ
ஜ்ஞாநரத்நாபஹாராய
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரதஃ

ஜந்ம துக்கம் ஜரா துக்கம்
ஜாயா துக்கம் புநஃ புநஃ
ஸம்ஸார ஸாகரம் துக்கம்
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரதஃ

மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பந்து ஸஹோதரஃ
அர்தம் நாஸ்தி க்ருஹம் நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரதஃ

ஆஶயா பத்த[illegible]க
கர்மணா பஹுசிந்தயா
ஆயு க்ஷீணம் ந ஜாநாதி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரதஃ

2. ஓடு, செல்.—இவைகளிலிருந்து பிறந்த இறந்தகால எதிர்மறை வினையாலணையும் ஆண்பாற்பெயர்களை யெழுதுக.

3. போட்டவன். இருப்பது, செய்வன, நடவாதிருந்தவன்; பழிப்பன, ஓடினவர்கள், சொல்கிறவன், உண்ணு திருப்பவன்—இவை இன்னவகை. வினையாலணை யும் பெயர்களென்று கூறுக.

---

151. தொழிற்பெயர் எவ்வாறு வரும்?

வினைப்பகுதிகளோடு தொழிற் பெயர் விகுதிகள் புணர்ந்து தொழிற் பெயர்களாகும்.

(உ-ம்.) 37-ம் சூத்திரம் (c) என்ற பிரிவிற் காண்க.

1. இறந்தகாலத் தொழிற்பெயர் இறந்தகாலப் பெயரெச்சத்தோடு மை, து என்னும் விகுதிகள் புணர்வதினால் வரும்.

(உ-ம்.) சென்ற+மை, து=சென்றமை, சென்றது.

2. நிகழ்காலப் பெயரெச்சத்தோடு மை, து விகுதிகள் புணர்வதினாலே நிகழ்காலத் தொழிற்பெயர் வரும்.

(உ-ம்.) தருகின்ற+மை, து=தருகின்றமை, தருகின்றது.

3. வினைப்பகுதியோடு எதிர்கால இடைநிலையும், அகர விகுதியும் அதன்மேல் மை, து விகுதிகளும் புணர்வதினாலே எதிர் காலத்தொழிற்பெயர் வரும்.

(உ-ம்.) செய்+வ்+அ+மை, து = செய்வமை, செய்வது.

152. முதனிலைத்தொழிற்பெயர் என்பதெது?

வினைப்பகுதியே தொழிலுக்குப்பெயராய் வழங்குவதாம்.

(உ-ம்.) தொடர், பகை.

153. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பதெது?

வினைப்பகுதி விகாரப்பட்டுத் தொழிலின் பெயரை உணர்த்துவதாம்.

(உ-ம்.) கூறு = கூற்று.
கெடு = கேடு.

154. முதனிலையில்லாத் தொழிற்பெயர்களெவை?

யாதொரு வினைப்பகுதியினின்றும் பிறவாமல், பகாப்பதங்களாயிருந்து தொழிலை யுணர்த்துவனவாம்.

(உ-ம்.) பசி, பட்டினி, சண்டை, சூது.

155. எதிர்மறைத் தொழிற்பெயர் எவ்வாறு வரும்?

வினைப்பகுதியோடே ஆமை என்பதைச் சேர்ப்பதினுலேயாம்.

(உ-ம்.) கொல்+ஆமை=கொல்லாமை, செய்யாமை.

60. அப்பியாசம்.

(1) கொடு, சா, போ, எழுது—இவற்றினின்று பிறந்த மூக்காலத்துக்குமுரிய தொழிற் பெயர்களை எழுதுக.

(2) நில், மீள், அறு, பகு—இவற்றினின்றுண்டான மூக்காலத்து எதிர்மறைத் தொழிற்பெயர்களையு மெழுதுக.

(3) அடியில் வருவனவற்றில் உள்ள தொழிற்பெயர்களை யெடுத்துக் காட்டி ஒவ்வொன்றும் இன்னவித மெனவுங் கூறுக.

a. "தேராமற்கற்றது கல்வியன்று"
b. "சீருடையாண்மை செய்கையி னறிப"
c. "மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை"
d. "தம்மை யடைந்தவரைக் கைவிடுவது நன்றோ?
e. "பழிக்கஞ்சாத்தராத்தினன்று தனி"
f. தாகங்கொண்ட காகம்.
g. பொய்பேசுவதிலும் இறப்பது நன்று.
h. படித்ததை மறக்கிறது சரியா?
i. "யார்மாட்டும் பொல்லாங்குரையாமை நன்று"

பாட்டியற்கொத்து - உரையுடன்-இதில் வச்சணந்திமாலை, சிதம்பரப் பாட்டியலின் பொருத்தவியல் மரபியல், நவநீதப்பாட்டியல் அடங்கியிருக்கின்றன	0	6
சர்வதரிசன சங்கிரகம் - இதில் உலோகாயத முதல் வேதாந்த மீறாகப் பதினாறு மதங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.	2	8
திருக்குறள் - பரிமேலழகருரை தெளிபொருள் விளக்கம், கருத்துரை-குறிப்புரை-2 வால்யம்.	6	0
வேதாந்தசாராமிருதமும், அத்துவித ரசமஞ்சரி மூலமும்-உரையும்	0	6
திருமூலர் திருமந்திரம் குறிப்புரையுடன்	3	8
வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகம்	0	3
வேதாந்த சூடாமணி-மூலம்பாக்கெட்சைஸ்	0	2½
கைவல்லிய நவநீதம்-மூலம் பாக்கெட்சைஸ்	0	3
பக்தமாலாவசனம்	3	8
பஞ்சதசி-செய்யுள்-பாக்கெட் சைஸ்	0	10
நியாயப்பிரகாசம்	4	0
வேதாந்தமகா சிந்தாமணி	4	0
கைவல்யம்-பொன்னம்பல சுவாமிகளுரை	2	0
கைவல்யம்-சச்சிதானந்த சுவாமிகளுரை	1	4
பிரபுலிங்கலீலை-உரையுடன்	2	8
தத்துவ விஞ்ஞானபோ[illegible]	1	0
சர்வமத சித்தா[illegible]	0	14
திருக்குற்றிரு[illegible]	0	14
தசகாரிய மகாவாக்கியம் உரையுடன்	0	8
பிரத்தியட்சானுபூதி விளக்கம்	0	8
சிவஞானபோதம்-உரையுடன்	0	8
வேதாந்த இலக்கணம்	0	8
[illegible]ப்டானுபூதி-உரையுடன்	0	10
[illegible]ராக்கிய ரகசியம்	0	4
சொரூபசாரம்-உரையுடன்	0	6
வேதாந்த சூளாமணி உரையுடன்	1	4
சூதசம்ஹிதை வசனம்	1	0

சித்தாந்த பிந்து	ரூ 0	8
வேதாந்த பரிபாஷை	0	10
திருவாசகம்-பாக்கெட்ஸைஸ்	0	10
கவிதாரம்	0	8
வேதாந்த சாரம்	0	10
[illegible]-பாக்கெட் ஸைஸ்	0	1
தருக்கபரிபாஷை-குறிப்புரையுடன்	1	0
மோக்ஷஸாதன விளக்கம்	2	0
அறிவானந்த சித்தியார்	0	4
சிவமஹிம ஸ்தோத்திரம்	0	1
தோடகம்	0	4
[illegible]	0	2
ஸ்தோத்திரக்கொத்து	0	1
தருக்காமிர்தமும்-பிரகரண போதமும்	0	8
விருத்திரத்நாவளி	0	12
பாலபோதம்	1	0
விசாரசந்திரோதயம்	1	4
பஞ்சதசி-2 வால்யூம்	10	0
விருத்திப் பிரபாகரம்	4	0

சங்கரக்ரந்தாவளி

அபரோக்ஷாநுபூதி	0	5
ஆத்மபோதமும்-தத்வபோதமும்	0	[illegible]
பஞ்சீகரண முதலியன	0	1[illegible]

கீதைக் கொத்து

உத்தரகீதை	0	4
குருகீதை	0	3
இராமகீதை	0	3
தத்துவமஸி மகாவாக்யமும் 4மகாவாக்யமும்	0	2
விவேகசிந்தாமணி-வேதாந்த பரிச்சேதம்	0	[illegible]
சிதாகாசத்தாலாட்டு உரையுடன்	0	[illegible]
ஸ்ரீ சங்க[illegible]ண்டனாசாரிய சம்வாதம்		
தருக்க[illegible]முதி		
பிரம்ம[illegible]ர்வாத பத்ததி		

லோகோபகாரி ஆபீசு,

கோமளேச்வரன் பேட்டை, சென்னை.